சித்திரம்

மலர் 8 இதழ் 1

Jan 1935

JL
R673 ; 1.N28
M35 8.1.
187102

403

403

12 JAN 1935
நிலையம்
திருச்சிற்றம்பலம்

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 8—No. 1.

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | பவ ஆண்டு தைத் திங்கள்<br>1935 ௵ ஜனவரி௴ | இதழ் ௧ |
|---|---|---|

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| சைவர் மகாநாட்டுத் தலைமை உரை | ... ... | ௧ |
| சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமை உரை | ... | ௩௩ |
| சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமை உரை | ... | ௪௯ |
| சமாஜ 29-ம் ஆண்டு அறிக்கை | ... ... | ௫௪ |
| சமாஜ ௨௯-ம் ஆண்டு நிறைவிழா | ... ... | ௬௧ |

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A., L. T.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

# முக்கிய அறிக்கை

நமது சமாஜத்தின் சார்பில் சித்தாந்த பாடவகுப்பு ஒன்று நாளது பவ௵ தை௴ ௭௳ ஞாயிற்றுக்கிழமை (20-1-1935) தைப்பூச நன்னாளன்று காலை 8-மணிக்குத் தொடங்கப்படும். சித்தாந்த சாத்திரங்களைப் பன்முறை நன்மாணாக்கருக்குப் பாடமாகச் சொல்லி வைத்த திரு. சரவணப் பெருமாள் பிள்ளையவர்கள் புதல்வரும், சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதிப் பதிப்பாசிரியருமாகிய சைவத் திருவாளர். எஸ். வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் "சிவப்பிரகாசம்" என்ற சாத்திரத்தைப் பாடமாகத் தொடங்கி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8-மணி முதல் 9-மணி வரை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகாநந்த நிலைய'த்தில் நடத்துவார்கள். அன்பர்கள் அனைவரும் வருக.

# இரண்டாவது அகில இலங்கை இந்து மகாநாடு

இது மிகச் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் 29, 30-12-1934ல் சென்னை உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரும், சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியும், 'சித்தாந்தம்' பத்திராசிரியருமாகிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி, ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதல்நாட் காலையில் தலைவரவர்கள் மேளவாத்தியம், பூரணகும்பம் முதலிய மரியாதைகளுடன் ஊர்வலமாக வரவேற்கப்பட்டார்கள். திரு. மா. ச. இளையதம்பி (வரவேற்புக்கழகத் தலைவர்) தமது வரவேற்புப் பேருரையை நிகழ்த்தினார். பிறகு வரவேற்புக்கவி வழங்கப்பட்டது. பிறகு தலைவர் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார். திருவாளர்கள் ம. வே. மகாலிங்கசிவம், தலைவர், சி. நாகலிங்கம் ஆகிய பேரறிஞர்கள் முறையே 'தாயுமானவர்', 'மாணிக்கவாசகர் கனிவு', 'உபநிஷத்துக்களும் சைவமும்' என்பனபற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். தலைவர் கருத்துரையோடு அன்றைய கூட்டம் முடிந்தது. அடுத்தநாள் உயர்திரு சுவாமி விபுலாநந்தரவர்கள் 'பதஞ்சலி யோகசூத்திரம்' என்பது பற்றியும், திரு. நா. பொன்னையா அவர்கள் 'அப்பரும் அப்பூதியடிகளும்' என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். பிறகு அகில இலங்கை இந்து மகா சபை என்பதொன்று புதுவதாக நிறுவப் பெற்றது. இதற்கு திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தலைவராகவும், உயர் திருவாளர்கள். சுவாமிவிபுலாநந்தர், சு. நடேச பிள்ளை, சு. இராசரத்தினம் ஆகிய மூவரும் உதவித் தலைவர்களாகவும், திரு க. நவரத்தினம் காரியதரிசியாகவும், திரு. கா. அருளம்பலம் பொருட்காப்பாளராகவும் ஏனைய பலர் நிர்வாக சபையினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பிறகு திரு. சோமசுந்தரப் புலவர் 'கந்தபுராணக் குறிப்புப் பொருள்' என்பது பற்றியும், தலைவர் 'மெய்கண்டார்' என்பது பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். பிறகு 'இந்து சாதனப் பத்தி'ராசிரியர் திரு.ம.வே. திருஞானசம்பந்தம் அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினார்கள். கடவுள் வாழ்த்தொலி முழக்கத்தோடு மகாநாடு இனிது முடிந்தது. இம்மகா நாட்டின் முழு விபரம், தலைமைப்பேருரை, வரவேற்புப் பேருரை, வரவேற்புக்கவி முதலியவற்றை 3-1-1935ல் வெளிவந்த "இந்துசாதனம்" பத்திரிகையின் விசேஷப் பிரசுரத்திற் காண்க.

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

“ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு ”



| மலர் ௮ | பவ ஆண்டு தைத் திங்கள்<br>1935௵ ஜனவரி௴ | இதழ் ௧ |
|---|---|---|



## தலைமை உரை

[திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

‘முத்த னேமுதல் வாமுகி ழும்முளை
ஒத்த னேஒரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையுள்
அத்த னேஅடி யேனைக் குறிக்கொளே’

### I தோற்றுவாய்

**சகோதரிகளே! சகோதரர்களே!**

சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்கு யான் புதியவனல்லன் ; யான் ஒரு பழைய தொண்டன். இங்கே ஈண்டியுள்ள சமாஜத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு விழாக் கூட்டத்துக்கு என்னைத் தலைவனாக நீங்கள் தெரிந்தெடுத்தீர்கள். உங்கள் உழுவல் அன்புக்கு எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

சமாஜத்தின் ஆண்டு விழாக் கூட்டம், இம்முறை, தென்னார்க்காட்டிலே, திருவதிகை என்னும் இப்பழம்பெரும்பதியிலே குழுமியிருக்கிறது. சமாஜத்துக்கும் தென்னார்க்காட்

டுக்கும் அன்பார்ந்த தொடர்பு உண்டு. சமாஜத்தின் தாயகம் தென்னார்க்காடு. இவ்வுறவு, சமாஜத்தை அடிக்கடி இந்த ஜில்லாவிற்கு ஈர்க்கிறது போலும்!

சைவசித்தாந்தமகாசமாஜம் பிறந்த இடம் திருப்பாதிரிப்புலியூர். அதன் முதல் ஆண்டுவிழா பெரும்பற்றப்புலியூரில் நடைபெற்றது; வெள்ளி விழா கிழக்குமருதூரில் நிகழ்ந்தது; பல ஆண்டு விழாக்கள் கூடலூர், திருப்பாதிரிப்புலியூர், திருவெண்ணெய்நல்லூர் முதலிய பதிகளில் நடந்தேறின. இம்முறை, சமாஜத்தின் ஆண்டு விழா, திருவதிகையில் கொண்டாடப்பெறுகிறது. ஆகவே, தென்னார்க்காடு சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஈன்ற தாயாகவும், செவிலித் தாயாகவும் விளங்குகிறது என்று சுருங்கச் சொல்லலாம்.

## தென்னார்க்காடும் சிவநெறியும்

தென்னார்க்காடு, சிவமயமாகப் பொலிதரும் வாய்ப்புடையது. இதன்கண், எல்லாத் திருப்பதிகட்கும் உயிர் நாடியாயுள்ள தில்லையம்பதி திகழ்கிறது; வேறுபல தொன்மைப் பதிகளும் ஆங்காங்கே ஒளிர்கின்றன. சமய குரவருள் இருவரையும், சந்தான குரவரையும், திருநீலகண்டர் - மெய்ப்பொருளார்-நரசிங்கமுனையர் முதலிய நாயன்மாரையும் ஈன்ற பெருமை தென்னார்க்காட்டுக்கு உண்டு. பெரியபுராணம், சிவஞானபோதம் முதலிய சிவநூல்கள் எங்கே பிறந்தன? தென்னார்க்காட்டிலன்றோ? கம்பரை வளர்த்தது எது? அங்கவை சங்கவையரை ஆட்கொண்டது எது? தென்னார்க்காடென்று சொல்லவும் வேண்டுமோ? இராமலிங்க சுவாமிகள் அருளறம் ஓம்பியதும் தென்னார்க்காடே யாகும். தென்னார்க்காட்டுப் பாடலிபுரத்தில் எழுந்த கலைப் பெருக்கை விரித்துக் கூறவேண்டுவதில்லை. தென்னார்க்காட்டிலே தோன்றிய அறவோர் பலர்; அந்தணர் பலர்; பாவலர் பலர்; நாவலர் பலர்; வீரர் பலர்; கலைஞர் பலர்; தத்துவர் பலர்; ஞானிகள் பலர். தென்னார்க்காட்டைச் சிவம் பெருக்கும் ஒரு சக்தி பீடம் என்று கூறுதல் மிகையாகாது.



தென்னார்க்காட்டின் இயற்கை வளத்தில் என்றுஞ் சிவமணங் கமழ்ந்துகொண்டிருக்கும். தவத்துக்கும் அமைதிக்கும் உரிய இயற்கை அமைப்புகள் தென்னார்க்காட்டில் பலபடக் கிடக்கின்றன. இங்கே ஒன்று நினைவிலுறுகிறது. அதன் வனப்பை என்னென்று கூறுவேன்! அது 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு'! இயற்கைச் சிவம் அங்கே நடம்புரிகிறது. அந்நடத்தைக் கண்ணுள்ளோர் காணலாம். அவண், எரிவாயினின்றும் கல்லடுக்கு உருகி உருகி, வழிந்து வழிந்து, தேங்கித் தேங்கிக், குவிந்து குவிந்து, பாறையாய் இறுகி இறுகி ஓங்கலாயிற்றோ என்னத்தக்க ஓர் அழகிய குன்றோவியமும், அவ்வோவியத்தினின்றும் மற்றுமோர் ஓவியம் முகிழ்த்து எழுந்தாலெனப் பொலியும் ஒரு பூங்கோயிலும், அக்கோயிலைத் தன்னகத்தே காட்டும் பளிங்கென விளங்கும் ஒரு சுனையும், வெண்ணெய்ச் சடையன் அருளோ என்னப் பெருகிக், குன்றோவியத்தை அணைந்து அணி செய்யும் பெண்ணையும், பெருக்குப்பாட்டென ஒழுங்காயோடுதற்கு அரணாக இருபுறமும் நிற்கும் பசுஞ்சோலை மலைத்தொடர்வும், இன்ன பிறவும் காட்சியளிக்கும். அக்காட்சி, கண்ணையுங் கவரும்; கருத்தையுங் கவரும்; தவங்கூட்டும்; அமைதியில் நிறுத்தும்; சிவமாக்கும். அக்குன்றில் அமர்ந்து இயற்கைச் சிவத்தில் ஈடுபடும் ஒருவன் சிவனடியணுதல் ஒருதலை.

## திருவதிகை

இன்னோரன்ன சிறப்புக்கள் பலவுடைய தென்னார்க்காட்டிலே, வற்றாது மணி கொழிக்குங் கெடிலநதிக்கரையிலே, அன்பர்கள் பணி கொழிக்குந் திருவதிகையிலே, சைவ சித்தாந்த மகா சமாஜச் சார்பிலே நாம் அனைவரும் கூடியிருக்கிறோம். திருவதிகை நினைவு தோன்றும்போது, நமது சைவச் செல்வம் - தவ விளக்கு - திலகவதியார் நினைவும் தோன்றுகிறது. திலகவதியாரை நினைப்போமாக. 'அனைத்துயிர்க்கும் தாங்கிய' அருளினின்றும் மலர்ந்த சிவப்பொலிவும், தவக்கோலமும், திருவலகும், திருமெழுக்குத் தோண்டியும்

கொண்ட ஓர் அற்புதத் தெய்வ வடிவம் புலனாகிறது. அத் தெய்வ வடிவை உன்னுவோம்; வாழ்த்துவோம்; வணங்கு வோம்.

திலகவதியாரது 'தயா' அன்றோ அப்பர் அருந்தமிழாகி நமக்குத் துணை செய்கிறது? அவர்தம் வேண்டுதலன்றோ ஆண்டவன் அருளாய் அப்பரை ஆண்டது? அம்மையார் உள்ளொளித் திறத்தை என்னென்று கூறுவது? ஒரு பெண் தெய்வத்தின் வேண்டுதல் எவ்வளவு காரியங்களை நிகழ்த்தி யது! பெண்மையின் பெருமை என்னே! என்னே!

திருவதிகை அட்டவீரட்டத்துள் ஒன்று. சிவபிரான் முப் புரம் எரித்த இடம் திருவதிகை என்று புராணம் புகல்கிறது. 'முப்புரமாவது மும்மல காரியம்' என்று திருமூலர் கூறு கிறார். 'அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்-முப்புரம் செற் றனன் என்பர்கள் மூடர்கள்-முப்புர மாவது மும்மல காரியம்-அப்புரம் எய்தமை யாரறி வாரே' என வரூஉம் அவர்தம் திருமந்திரத்தை ஓர்க.

திருவதிகை, முப்புரமென்னும் மும்மல எரிவுக்கு அறி குறியாயிருப்பது. திருவதிகையில் ஆண்டவன் அப்பருக் குச் சூலைநோய் தீர்த்து அருள் புரிந்ததும், நம்பியாரூர ருக்குத் திருவடிதீக்கை செய்ததும் முப்புரமென்னும் மும் மல எரிவை உணர்த்துவனவாம். வேறு பல அற்புதச்செயல் களும் திருவதிகையில் நிகழ்ந்துள்ளன. திலகவதியாரது திருத்தொண்டை ஏற்ற திருவதிகையில் வீற்றிருந்தருளும் வீரட்டப் பெருமான் திருவருளை முன்னிட்டுச் 'சைவ சித் தாந்த மகா சமாஜம்' என்னும் பெயரையே பொருளாக் கொண்டு பேசப் புகுகிறேன்.

18/7/02

# II சைவ சித்தாந்தம்

## பெயரும் பொருளும்

முதலாவது 'சைவ சித்தாந்தம்' என்பதன்மீது கருத் துச் செலுத்துவோம். சைவ சித்தாந்தம், 'சைவம்' என்றும், 'சித்தாந்தம்' என்றும் வழங்கப்படுகிறது. 'சைவமும்' 'சித் தாந்தமும்' ஒன்றே.

உலகில் எத்துணையோ சித்தாந்தங்கள் இருக்கின்றன. அவைகளை இன்ன இன்ன சித்தாந்தமென்று அடைமொழி யால் அணி செய்தல் வேண்டும். இல்லையேல், அதன் பெய ரும் தத்துவமும் விளங்குதல் அரிதாகும். அடை அணியின் றிச் சைவம் மட்டும் 'சித்தாந்தம்' என்று அழைக்கப்படுவது உலகறிந்ததொன்று. 'சித்தாந்திகள்' 'சித்தாந்த சாத்திரம்' என்னும் ஆட்சிகள், முறையே சைவர்களையும் சைவ சாத்தி ரத்தையும் உணர்த்தல் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. இச்சித் தாந்தம், உலகிலுள்ள எல்லாச் சித்தாந்தங்களிற் கலந்தும், கடந்து தனித்தும் நிலவுதலால், இஃது அடை அணியின் றிச் 'சித்தாந்தம்' என்று வழங்கப்படுகிறதென்க.

'சித்தாந்தம்' என்பதற்குப் பல பொருள்கள் சொல்லப் படுகின்றன. அப்பொருட்களுள் ஒன்று ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. அஃது எது? அது மிகவுந் தொன்மையது; ஆனால் பெரிதும் வழக்காறற்றது. சரித்திரக்கண்ணார்க்கு அதன் தொன்மையும், வழக்காறற்றமையும் இனிது புலனா கும். வழக்காறற்ற ஒன்றைக் கூறுதலால் சில இடர்கள் உண்டு என்பது எனக்குத் தெரியும்; தெரிந்தே அதனிடைத் தலைப்படுகிறேன்.

'சித்தாந்தம்' என்பதற்குச் 'சித்தர் கண்ட முடிவு' என் பது பொருள். சித்தமார்க்கம் சித்தாந்தம். சித்தர், சிவசம் பந்த முடையவராதலால், அவர் கண்ட மார்க்கமாகிய சித் தாந்தம், சைவ சித்தாந்தம் என்று வழங்கலாயிற்று. 'சித் தர் சிவலோகம் இங்கே தெரிசி[illegible]' 'சித்தர் சிவத்தைக் கண்டவர்' என்றார் திருமூலர்.

சைவம், சிவசம்பந்தம். சிவம் என்பது இறைவனுக்குரிய பல பெயர்களுள் ஒன்று. அப்பெயர், தொன்மை வாய்ந்தது. அதனாலும் அது சிறந்தது. ஒரு காலத்தில் அப்பெயரை உலகமே ஏற்றுப் போற்றியது.

சிவ வழிபாடு ஒருபோது உலகம் முழுவதும் பரவியிருந்தது. இதற்குச் சான்றுகள் பல உண்டு. அவைகளை இம்முன்னுரையில் விரித்துக் கூறுவது அநாவசியம். பால்டிக் கடல், அயர்லாந்து, நீலநதிக்கரை, துருக்கிஸ்தானம் முதலிய இடங்களில் இன்னும் சிற்சிலபோழ்து சிவலிங்கங்கள் கண்டு எடுக்கப்படுகின்றன. இஃது எதைக் குறிக்கிறது? சிவ வழிபாட்டின் பரப்பை யன்றோ குறிக்கிறது?

சிவம் என்பது பலபொருள் ஒரு சொல். அதற்குச் சித்தர் காலத்தில் கொள்ளப்பெற்ற பொருள் 'சுத்தம்' என்பது. இதனை ஜைன சகஸ்திரநாம வியாக்கியானத்திற் காணலாம். சிவம் அசைவற்றது; போக்குவர வில்லாதது; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது; எல்லாவற்றிலுங் கலந்தும் கடந்தும் நிற்பது; எல்லாவற்றிலுங் கலந்தாலும் தனது இயல்பினின்றும் திரியாதது; சித்தத்தைத் தன்பால் வைத்தோர் உள்ளத்தில் ஒளிர்வது.

## மார்க்க வரலாறு

சித்த மார்க்கம் முதன் முதல் கால் கொண்ட இடம் நாவலந் தீவு. 'நாவலந் தீவு' என்னும் பெயர் நமது நாட்டுக்குரிய பெயர்களுள் ஒன்று. அப்பெயர் ஒருபோது உலகுக்கும் வழங்கி வந்தது. 'பரதகண்டம்' என்னும் பெயர், 'நாவலந் தீவு' என்னும் பெயருக்குப் பிற்பட்டது. நமது நாடு 'பரதகண்டம்' என்னும் பெயர் பெறுதற்கு முன்னரே, அதன்கண் சித்தமார்க்கம் நிலவியதெனில், அம்மார்க்கத்தின் தொன்மையை என்னென்று கூறுவது?

சித்த மார்க்கம், நாவலந் தீவினின்றும் நாலு பக்கங்களிலும் பரவிப் பரவி, ஆங்காங்குள்ள மொழியில் ஒவ்வொரு விதப் பெயர் பெறலாயிற்று. நாளடைவில் ஒவ்வொரு பெயர்



ஒவ்வொரு சமயமாகக் கொள்ளப்பட்டது. இப்பொழுது பல வேறு பெயர்களால் பல வேறு இடங்களில் நிலவி வரும் சமயங்கள் யாவும், சித்தமார்க்கம் என்னும் ஒன்றினின்றும் பிறந்தனவே யாகும். 'சமயங்களெல்லாம் சித்த மார்க்கத்தினின்றும் பிறந்தன' என்னும் உணர்வே பல இடங்களில் மாண்டு விட்டது. இந்நாளில் 'எல்லாச் சமயங்களும் சித்த மார்க்கம்' என்று சொல்வதும் எள்ளப்படும் போலும்!

## சித்தர்

சித்தர் யாவர்? சித்தர் சித்தி பெற்றவர்; சித்தை யுடையவர். சித்தாவது, ஆத்ம சக்தியினின்றும் எழுவது. சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிந்தனையில் மூழ்கமூழ்கச் சித்தவிகாரம் ஒடுங்கும். அஃது ஒடுங்க ஒடுங்க ஆத்ம சக்தி எழும். 'ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி' என்றார் வாதவூரடிகள்.

ஆத்ம சக்தியில் பலதிறப் படிகளுண்டு. முழு ஆத்ம சக்தி எல்லாவிதச் சித்துக்களையும் கூட்டும். அச்சக்தியால் ஆகாததொன்றில்லை. அதைப் பெற்றவர் எல்லாஞ் செய்ய வல்லவராவர். இயற்கை, அவர்கட்கு ஏவல் செய்யும். அவர் செயற்கருஞ் செயல் செய்வர். அவர்தந் திறங்களைத் தாயுமானார் 'வித்தகச் சித்தர்கணம்' என்னும் பகுதியில் விளக்கியுள்ளார்.

சித்தர், சிவத்தை நினைந்து நினைந்து, சிவமானவராதலால், அவர், நரை திரை மூப்பு சாக்காடு முதலியவற்றைப் பெறுவதில்லை. அவர் என்றும் ஒரு பெற்றியராய்ச், சிவந்த மேனியராய், என்றும் இளைஞராய், அழகராய் வாழ்பவர். 'சுழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியுங், கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித், துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க், கழற்றி தவிர்ந்துடல் அஞ்சன மாமே', 'மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள, வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம், நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட், டூன்றி யிருக்க உடம்பழி யாதே', 'உந்திச் சுழியின் உடனே பிராணனைச் சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால், முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச், சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே',

'நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ், சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு, ஞாலம் அறிய நரைதிரை மாறிடும், பாலனு மாவர் பராநந்தி ஆணையே' எனவரூஉம் திருமூலர் திருவாக்குகளை நோக்குக. இத்தன்மையோர் சித்தரெனப் படுவர்.

## தென்னாடும் சித்த மார்க்கமும்

தென்னாட்டில் சித்த மார்க்கம் நன்கு வளர்ந்து வந்தது. இடையில் அதற்குச் சிதைவு நேர்ந்தது. அப்போது, சமயகுரவர் நால்வர் தோன்றி, அம்மார்க்கத்தை ஓம்பினர். அந்நால்வரும் சித்தரே. அவர் அறிவுறுத்தியதும் சித்த மார்க்கமே. தம்மை ஆட்கொண்ட மூர்த்தியைச் 'சித்தனே திருவாலவாய் மேவிய - அத்தனே' என்றும், சித்தனைத் திரு வண்ணா மலையனை' என்றும் 'சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே' என்றும், 'சித்தனைச்சிவ லோகனை' என்றும் அப்பெருமக்கள் போற்றி இருத்தல் காண்க.

சிவன் எல்லாம் வல்லவனாதலால், அவன் சித்தன் என்னப்பட்டான். அவன் தொடர்புகொண்டு வாழ்வோருஞ் சித்தரெனப்பட்டனர். 'சித்தர் வந்து பணியுஞ் செல்வச் சிரபுர மேயவனே' 'சித்தராய் வந்துதன்னைத் திருவடி வணங்குவார்கள்' 'சித்திசெய்பவர்கட் கெல்லாஞ் சேர்விடம்' 'சித்தர் சித்தம் வைத்தபுகழ் சிறுவன் ஊரன்' என வரூஉந் தமிழ் மறை மொழிகளை உன்னுக.

நால்வர் வரலாற்றை நோக்குழி, அவர்தம் உடல் இவ்வுலகில் இறந்துபடவில்லை என்பது நன்கு விளங்கும். ஞானசம்பந்தர் திருநல்லூர்ப் பெருமணத்திலே சிவசோதியிற் கலந்தார். நாவரசர் சிவானந்த ஞானவடிவில் ஒன்றினார். அவர், 'சிங்கத்தால் விழுங்கப் பெற்றார்' என்னும் பொய்க்கதை பின்னே புனையப்பட்டது. நம்பியாரூரர் யானைமீதிவர்ந்து நொடித்தான்மலை நோக்கிச் சென்றார். மாணிக்கவாசகனார் மன்றில் புகுந்து ஒளியானார். இவர்கள் அருளிய தமிழ்மறையில் சாகா நிலைக்குரிய சான்றுகள் மலிந்து கிடக்கின்றன. ஈண்டுத் தாலிபுலாக நியாயம்பற்றி ஒன்றைமட்டும் எடுத்துக் காட்டு



கிறேன். 'சொல்லுவ தறியேன்வாழி முறையோ - தரியேன் நாயேன் தானெனைச் செய்தது-தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்-கருளிய தறியேன் பருகியும் ஆரேன் - விழுங்கியும் ஒல்ல கில்லேன் - செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து - உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப-வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்-தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன் தழை - குரம்பை தோறும் நாயுட லகத்தே-குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய - அற்புத மான அமுத தாரைகள் - எற்புத் துளைதோறும் ஏற்றினன் உருகுவ-துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக் - கள்ளூ றாக்கை அமைத்தனன் ஒள்ளிய - கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை - என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற் - கருணை வான்தேன் கலக்க-அருளொடு பராவமு தாக்கினன்'—இது திருவாசகத்தில் - திருவண்டப் பகுதியில் - இருப்பது. இதன்கண் மாணிக்கவாசகனார் தாம்பெற்ற இறவா நிலையை இனிது விளக்கியிருத்தல் காண்க.

இப்பெரு நிலையை அடைய முன்னைநாளில் முயன்றவர் பலர்; பின்னை நாளில் முயன்றவர் சிலர். அவருள் இராமலிங்க சுவாமிகளைச் சிறப்பாகக் குறிக்கலாம். இராமலிங்க சுவாமிகளுக்குத் திருவாசகத்தில் பொதுவாகத் தணியாக் காதல் உண்டு. சிறப்பாக அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்தது திருவண்டப் பகுதி. திருவண்டப் பகுதியில் உள்ள 'என்னையும் இருப்பதாக்கினன்' என்னும் பெருமொழி, சுவாமிகள் உள்ளத்தைக் கோயில் கொண்டது. சுவாமிகள் அதில் படிந்து படிந்து அதுவாக முயன்றார். தம்மை இருப்பதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற வேட்கை அவருள் முருகி எழுந்தது. அவ்வேட்கையைத் தணித்துக்கொள்ள இராமலிங்க சுவாமிகள் மாணிக்கவாசகனாரை அடைந்து, அழுத அழுகை அளவிடற் பாலதன்று. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்னும் வாசகத்தின் நுட்பம் இராமலிங்க சுவாமிகளுக்குத் தெரியும். இராமலிங்க சுவாமிகள், மாணிக்க வாசகனாரை நோக்கி, 'உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற-திருவண்டப் பகுதியெனுந் திருவகவல் வாய்மலர்ந்த -

குருவென்றெப் பெருந்தவருங் கூறுகின்ற கோவேநீ - இருவென்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே’ என்று வேண்டுதல் செய்தார். இவ்வேண்டுதலின் நுட்பத்தை உன்ன உன்ன உண்மை விளங்கும். திருவண்டப் பகுதியில் உள்ளது இறவா நிலை. அந்நிலை பெற்றோர் சித்தராவர்.

‘சித்தன்’ என்னுஞ் சொல்லுக்கு உலகில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவைகளுள் சில வருமாறு:—நந்தி, நாதன், அருகன், புத்தன், குமரன், தீர்த்தங்கரன், தீர்க்க தரிசி, கிறிஸ்து, நபி, குரு, ஆச்சாரியன் முதலியன. இப் பெயர் வேற்றுமையைக் கருதாது, பொருள் ஒற்றுமையில் கருத்துச் செலுத்துவது சிறப்பு.

## சித்தர் திருக்கூட்டம்

சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சித்தி பெற்றவர் பலர் உளர். அவருள் மிகமிகப் பழமையானவர் சிலர். அச் சிலரே உலகுக்கு வழிகாட்டிகளாக நிற்கிறார். அவர் வழி உலகம் இயங்குகிறது. அவர் சேர்ந்த ஒரு தனித் திருக் கூட்டமும் இருக்கிறது. அத்திருக்கூட்டம், இமயத்தின் முடியிலுள்ள கைலாயத்தில் வீற்றிருக்கிறது. அக்கைலாயம் இராப்பகல் அற்றது. அது வேறு; இமயத்தடியிலுள்ள கைலாயம் வேறு. முன்னையது நுண்ணியது; பின்னையது பருமையது. இஃது அதை நினைவூட்டுவது. சமயம் நேரும் போதெல்லாம் அத்திருக்கூட்டத்தினின்றும் சிலர் போந்து, சித்தமார்க்கமென்னுஞ் சித்தாந்தத்தை ஓம்பிச் செல்வது வழக்கம்.

குருமார் திருக்கூட்டத்தை நம்பாத சமயத்தவர் இல்லை; அவர்தம் வருகையைச் சொல்லாத சமய வேதமும் இல்லை. இதனால் சமயங்களின் தாயகம் ஒன்றே என்பது நனி விளங்குகிறது. அத்தாயகத்தின் பெயரைப்பற்றி உலகில் வாதங்கள் நிகழ்ந்து வருகின்றன. பொருள் ஒருமை புலனாகும்போது, வாதங்களெல்லாம் ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போல இரிந்து ஒழியும்.



## ‘சித்தாந்த’ ஆட்சி

சித்தர் சமயம், தொடக்கத்தில் ‘சித்தாந்தம்’ என்னும் பெயர் பெற்றிருந்தது. பின்னே அதற்கு வெவ்வேறு மொழியில் வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டன. எனக்குத் தெரிந்தவரை இன்னும் இரண்டு சமயங்கள் சித்தாந்தப் பெயரை நெகிழவிடாமலிருக்கின்றன. ஒன்று சைவம்; மற்றொன்று ஜைனம். சைவம், ‘சித்தாந்தம்’ என்று வழங்கப்படுவது வெள்ளிடைமலை. ஜைனம், சித்தாந்த மென்னும் வழக்குடையதெனில், இந்நாளைய சைவ உலகத்திற்கு ஒருவித வியப்பே தோன்றும். ஜைன தத்துவங்களைக் கொண்ட வேதத்துக்குச் சில பெயர்கள் சொல்லப்படுகின்றன. அவை, சதுர் அநுயோகம், பரமாகமம், சித்தாந்தம் முதலியன. ‘சித்தாந்தம்’ என்னும் வேதப் பெயரைச் சமயத்துக்கும் வழங்கலாமன்றோ? ‘சித்தாந்தம்’ என்னும் தனி ஆட்சி ஜைனத்திலும் இருப்பது கவனிக்கத் தக்கது.

## கால மூவர்

ஒவ்வொரு போதும் சித்த மார்க்கத்தை ஓம்பச் சிலர் போதருவர். அவ்வப்போது போந்தவர்களின் பெயர்களை ஈண்டு விரிக்கிற் பெருகும். அணித்தே தோன்றிய சிலர்மீது எனது எண்ணம் செல்கிறது. அவருள் குறிக்கத் தக்கவர், சுவீடன்பர்க், பிளவட்ஸ்கி அம்மையார், தாயுமானார் ஆவர்.

சுவீடன்பர்க், சித்தர்நிலை அடைந்து அதியற்புதச் செயல்களை நிகழ்த்தினார். அவைகளைக் கூறும் நூல்களும் இருக்கின்றன. அந்நூல்களின் சாரத்தைக் கோபால் செட்டியார் வடித்து உதவியுள்ளார். அவருக்கு எனது நன்றியறிதல் உரியதாக.

பிளவட்ஸ்கி அம்மையார் சித்தர் கூட்டத்தின் பல நுட்பங்களை விளக்கியுள்ளார். அவர், ஒருவரைச் சித்தர் கூட்டத் தலைவரென்று குறிப்பிடுகிறார். அத்தலைவரை அம்மையார் ‘மோனமூர்த்தி’ (சைலண்ட் வாச்சர்—Silent Watcher) என்று சொல்கிறார். அம்மூர்த்திக்குரிய இயல்கள் சில, அம்மையாரால் விளக்கப்பட்டிருக்கின்றன. அவ்வியல்களை நோக்குழி

மோனமூர்த்தி என்பவர் நம் தட்சணாமூர்த்தியாகக் காணப்படுகிறார். அம்மையார் கண்ட 'தியசாபிகல் சங்கக்' கோயில் ஒன்றில் தட்சணாமூர்த்தி உருவம் பதிக்கப்பட்டிருக்கிறது.

தட்சணாமூர்த்தியை ஜைனர் விருஷப தேவர் என்றும், பௌத்தர் ஆதி புத்தர் என்றுங் கூறுப. '**** மாக்கயிலை மிசைநாப்பண் **** மூவிலையொரு நெடு வேலின் - மேவாத வினையவுணர், குன்றுபட நூழிலாட்டி - வென்றட்ட விறல் வெகுளியை, மூவெயிலின் முரண்முருக்கி-மூவர் சரணடைய நின்றானை, கருப்புநாண் வில்லிபட - நெருப்புமிழ் நெடு நோக்கினை, கோள்வலிய கொடுங் கூற்றைத் - தாள்வலியின் விழவுதைத்தானை, பரிவில்கே வலக்கிழத்தி - பிரிவில்லா ஒரு பாகனை, ஆன்றமெய் அறம் வளர்க்கும் - மூன்றுகண் முனித்தலைவனை, ஆல நெடு நிழல் அமர்ந்தானை - கால மூன்றுமுடன் அளந்தானை, தாழ்சடை முடிச் சென்னிக் - காசறு பொன்னெயிற் கடவுளை, மன்னியபே ருலகனைத்தும்-நின்னுள்ளே நீயொடுக்கினை, நின்னின்று நீ விரித்தனை-நின்னருளின் நீகாத்தனை, எனவாங், காதிபகவனை அருகனை, மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே' எனவரூஉந் திருக்கலம்பகத்தில் உள்ள அருகனுக்கும், சைவ நூல்கள் கூறும் தட்சணாமூர்த்திக்கும் ஏதாயினும் வேற்றுமை உண்டா என்று சிவநேயர்களைக் கேட்கிறேன். காய்தல் உவத்தல் அகற்றி, எதையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுக்கு அழகு.

தாயுமானார், குருமரபு வணக்கத்தில் முதன் முதல் 'துய்ய கரமலரால் சொல்லாமல் சொன்ன உண்மை - ஐயனைக் கல்லால்அரசை யாம்அணைவ தெந்நாளோ' என்று தட்சணாமூர்த்தியைப் போற்றி யிருக்கிறார்; வேறிடங்களில் 'வித்தகச் சித்தர் கணம்' என்றும், 'நவநாத சித்தர்' என்றும் அருளியுள்ளார். அவரே, 'சைவ சமயமே சமயம்' என்றும், 'சித்தாந்த வீதிவருந் தேவே' என்றும், 'சித்தாந்த முத்தி முதலே சிரகிரி விளங்கவரு தட்சணாமூர்த்தியே' என்றும் திருவாய் மலர்ந்திருக்கிறார். இத்திருவாக்குகளை முறை முறையே ஆராய்ந்து பார்த்தால், தாயுமானார், சித்தமார்க்கத்தையே சைவமென்றும் சித்தாந்தமென்றும் உல



குக்கு அறிவுறுத்தினார் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல உணரக் கிடக்கிறது.

இனித் தாயுமானாரது உபதேச மரபை நோக்குவோம். அவர், தங்குருவை 'மூலன் மரபில்வரு மௌன குருவே' என்று போற்றுகிறார். மூலன் மரபு எது? அது திருமந்திரத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருமந்திரம் சித்த மார்க்கத் திறங்களைக்கொண்ட ஒரு பெருங் கருவூலம்; தமிழ்ச் சித்த வேதம்.

## சித்த வேதம்

'தமிழ்ச் சித்தவேத'மெனில், 'வேறு மொழியிலும் சித்த வேதம் உண்டோ?' என்னும் ஐயம் பிறக்கும். சித்த வேதம் பல மொழியில் வெளி வந்திருக்கிறது. வேதம் ஒன்றே. அது சித்தரால் வெளிவருதலால் 'சித்த வேதம்' எனப்பட்டது. 'சித்தர் செழுமறைசேர் நாவராய்' என்பது ஞானசம்பந்தர் திருமொழி.

உலகில் ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் பெரியோர் அருளியதை 'வேதம்' 'வேதம்' என்று சொல்லிக்கொள்கிறார். வேதம் ஒன்றா? பலவா? வேதத்தின் காரணத்தை நோக்கும்போது அதை ஒன்று என்றும், அதன் காரியத்தை நோக்கும்போது அதைப் பல என்றும் சொல்லலாம். ஒன்றிலிருந்து பல தோன்றுதலும், பல, ஒன்றில் அடங்குதலும் இயல்பு.

வேதத்தின் காரணம் எது? காரியம் எது? காரணம் ஒலி; காரியம் எழுத்து. மொழிகளின் எழுத்துக்களெல்லாம் எங்கே யிருந்து பிறக்கின்றன? அவை, ஒலியிலிருந்து பிறக்கின்றன என்று எவருங் கூறுவர். ஒலி, நாதம் எனப்படும்.

நாதம் இருவகை. ஒன்று மாயா நாதம்; மற்றொன்று அருள் நாதம். மாயாநாதம் எல்லார்க்குங் கேட்பது. அருள் நாதம் அமலயோகிகட்குமட்டுங் கேட்பது. வேதம் அருள் நாதவடிவா யிருப்பது. அமல யோகிகள் அருள்நாதங்கேட்கப் பெறுவது ஒரு நிலை. அதற்குமேற்பட்டது அருட்சோதி.

கோடி' எனவும், 'ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள் - ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து-நானும் இருந்தேன்' எனவும் வரூஉந் திருமூலர் திருவாக்குகள் சித்த மார்க்கத்தின் தொன்மையை உணர்த்துவன. சித்தமார்க்கம் மிகமிகத் தொன்மையது என்று கூறும் அளவில் யான் நின்று விடுகிறேன்.

## சித்தாந்தத்தின் சமரசம்

சித்தாந்தம், உலகு உயிர் கடவுள் என்னும் மூன்றற்கும் அநாதி நித்தியங் கூறுவது. 'பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில் - பதிபோல் பசுபாசம் அநாதி' என்றார் திருமூலர். உலகு உயிர் கடவுள் என்னும் மூன்றனுள் ஒவ்வொன்றைப் பொருளாக் கொள்வோருமுளர்; இரண்டிரண்டைப் பொருளாக் கொள்வோருமுளர்; மூன்றையும் பொருளாக் கொள்வோருமுளர். எல்லாக் கொள்கையும் எவ்வழியிலாதல் இம்மூன்றனுள் அடங்கும். இம்மூன்றில் அடங்காதகொள்கை இல்லையென்றே கூறலாம். சித்தாந்தம் முப்பொருளுக்கும் உண்மை கூறுதலால், அதன் கலப்பில்லாத கொள்கை இருத்தற்கு இடம் ஏது? சித்தாந்தத்தை விடுத்துத் தனியே நிற்கும் கொள்கை இல்லை என்க.

முப்பொருளை வெவ்வேறாகக் கொள்வோரு மிருக்கிறார்; ஒன்றாகக் கொள்வோரு மிருக்கிறார். சித்தாந்தம் இருசாராரிடத்தும் மாறுபடுவதில்லை. சித்தாந்தம் பொருட்டன்மையில் மூன்றையும் வெவ்வேறாகவும், கலப்புத்தன்மையில் மூன்றையும் ஒன்றாகவும் கொண்டிருக்கிறது. இதனால், சித்தாந்தம் எக்கொள்கையிலும் எவ்விதத்திலாதல் தொடர்பு கொண்டு நிலவும் தன்மையது என்பது அறியக் கிடக்கிறது.

சித்தர் சமயம் என்னும் சித்தாந்தம் ஒன்றே முன்னை நாளில் எங்கும் பரவியிருந்தது. பற்பல காரணங்களால் அதற்குச் சிதைவு நேர்ந்தது. சிதைவால் பொருள் அழிவதில்லை என்பது அறிஞர் கூற்று. சிதைவால் நேர்ந்த கூறுபாடுகள் ஆங்காங்கே நிலவிக்கொண்டிருக்கின்றன. அவைகள் யாவும் சித்தாந்தத்தின் உறுப்புக்களேயாகும்.



இப்பெற்றிவாய்ந்த சித்தாந்தம் எவருடைமை? சித்தாந்தம் இன்னாருடைமை என்று யாண்டாயினும் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அதனை ஓம்பவந்த பெரியோர் அனைவரும், அதனை உலகுக்குரிய பொது உடைமை என்றே வலியுறுத்திச் சென்றனர்.

சித்தாந்தம் ஒரு சாதியார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஒரு நாட்டார்க்கோ, ஒரு மொழியார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ மட்டும் உரியதன்று. அது மன்பதைக்கே உரிய ஒன்று. 'ஒன்றது பேரூர் வழியா றதற்குள, என்றது போல இருமுச் சமயமும், நன்றிது தீதிது என்றுரை யாளர்கள், குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே' (திருமந்திரம்) 'ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள் ஒன்றோடொன்றொவ்வாமல் உளபலவும் இவற்றுள், யாது சமயம் பொருள் நூல் யாதிங்கென்னில் இதுவாகும் அதுவல்ல எனும்பிணக்கதின்றி, நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண நிற்பதுயாதொருசமயம்அதுசமயம்பொருள் நூல்'(சித்தாந்தசாத்திரம்) 'வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால், மாறுபடுங் கருத்தில்லை' (தாயுமானார்) எனவரூஉம் ஆன்றோர் மொழிகளைச் சிந்தித்துச் சித்தாந்தத்தின் சமரசத்தை உணர்க. இது குறித்துச் 'சைவத்தின் சமரசம்' என்றொரு தனிநூல் எழுதியிருக்கிறேன். விரிவு அதிற்காண்க.

திருநாவுக்கரசர் திருவருள் பெற்ற இடத்தில் நாம் கூடியிருக்கிறோமாதலால், அவர்தம் வாழ்வினின்றும் சமரசத்துக்கு ஒரு குறிப்பை இங்கே எடுத்துக் காட்டலாமென்று கருதுகிறேன். திருநாவுக்கரசர் தொடக்கத்தில் சைவ நெறியில் நின்றாரென்றும், பின்னே சமணசமயம் புகுந்தாரென்றும், மீட்டும் சைவ சமயம் நோக்கினாரென்றும் புராணம் கூறுகிறது.

திருநாவுக்கரசர் ஆண்டவன் அருள்பெற்றதும் வாய் மலர்ந்த பதிகத்தில் 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையா தொருபோதும் இருந்தறியேன்' என்றும், 'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை

பாடல் மறந்தறியேன் - நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்' என்றும் அருளியுள்ளார். இம்மொழிகளால் அவர் எப்பொழுதும் சிவபெருமானை மறக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இதைக் காணுஞ் சிலர், "அப்பர் சமணரா யிருந்தபோது சிவபெருமானை மறந்திருந்தவரல்லவோ? அவர் எப்பொழுதும் சிவபெருமானை 'மறந்தறியேன்; மறந்தறியேன்' என்று பாடியிருக்கிறாரே. இஃதென்ன! முரண்பாடா யிருக்கிறது!" என்று வியப்புறலாம். உண்மை விளங்கினால் வியப்புக்கு இடமிராது.

அப்பர் காலத்தில் சாதிமத வேற்றுமைகள் மலிந்திருந்தன. அவர்தந் தாய்தந்தையர் அந்நாள் வழக்கிலிருந்த சைவ நெறிபற்றி ஒழுகினார். பெற்றோர் வழியே அப்பரும் நிற்கலானார். அவ்வேளையில் ஆண்டவன் அருள் அப்பருக்கு விளங்கித் தோன்றவில்லை. அவர் நூலாராய்ச்சியில் தலைப்பட்டார். அவ்வாராய்ச்சியின் பயனாக அவருக்குச் சமணசமயம் மெய்ச்சமயம் என்று தோன்றிற்று. அவர் சமணசமயம் புகுந்தார். அங்கும் அவருக்கு ஆண்டவன் அருள் விளங்கித் தோன்றவில்லை. அவர் கலைஞானியாகவே வாழ்ந்தார். பின்னே அவருக்கு ஆண்டவன் அருள் கூடிற்று. கூடியதும், அப்பருக்குச் சமரசஞானம் பிறந்தது. "யான் தொடக்கத்தில் தாய் தந்தையர் வழி நின்று 'சிவன்' என்ற பெயரால் செய்த வழிபாடும், பின்னே சமணனாகி 'அருகன்' என்ற பெயரால் நிகழ்த்திய வழிபாடும் ஒரு பரம்பொருளையே சார்ந்திருக்கின்றன. உள்ள பரம்பொருள் ஒன்றே. அவ்வுண்மை இப்பொழுது விளங்குகிறது. ஆகவே எப்பொழுதும் ஆண்டவனை 'யான் மறந்தறியேன்'" என்று பாடியருளினார். இதில் என்ன வியப்பு?

தெய்வம் ஒன்றே. அதை அடையும் நெறியும் ஒன்றே. இந்நெறிக்குப் பல பெயர்கள் உலகில் வழங்கப்படுகின்றன. திருநாவுக்கரசர், தாம் திருவருளால் உணர்ந்த சமரசத்தைப் பல இடங்களில் அழகிய தமிழால் பாடி உலகுக்கு உபகரித்துள்ளார். அவைகளில் சில வருமாறு:—'வாது செய்து



மயங்கு மனத்தராய், ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள், யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம், மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே'; 'விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்தே, எரிவினால் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்ற தாகும்'; 'ஆறொன் றியசம யங்களின் அவ்வவர்க் கப்பொருள்கள், வேறொன் றிலாதன'; 'ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன'; 'சமயமவை ஆறினுக்குந் தலைவன்தான் காண்.' இத்திருவாக்குகள் அப்பர் கொண்ட சமயத்தின் சமரசத்தை விளங்கச் செய்வனவாம்.

## சமயத்தின் தற்கால நிலை

'சித்தாந்தம்' என்னும் பெயர்மீதுமட்டுங் கருத்துச் செலுத்திச் சிலர் அதை வெறுக்கிறார். பெயர்மீதுமட்டுங் கருத்துச் செலுத்தி ஒன்றை வெறுத்தல் கூடாது. பொருள் மீதும் நாட்டஞ் செலுத்துவது அறிவுக்கு அழகு. சித்தாந்தம் எப்பெயரால் அழைக்கப்பட்டா லென்ன? வெவ்வேறு பெயர்களால் அஃது இப்பொழுது அழைக்கப்படாமலா இருக்கிறது? அதற்கு எத்துணையோ பெயர்கள் இப்பொழுது புனையப்பட்டுள்ளன. பெயரைப்பற்றிய கவலையே வேண்டுவதில்லை. சித்தாந்தத்தின் தத்துவம் - உண்மைப் பொருள் - சிதைய அதைக் கோடலாகாது.

தமிழ்நாட்டில் 'சித்தாந்தம்' என்னும் பெயருக்கு இன்னும் பெரும்பழுது நேரவில்லை. ஆனால் அதன் பொருளுக்கு ஒரோவழியில் பழுது நேர்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் சித்தாந்தப்பொருளுக்குச் சாதி, மதம், நாடு, மொழி, நிறம், முதலிய தளைகள் இடப்பட் டிருக்கின்றன. அத்தளைகள் சித்தாந்தத்தின் சொரூபத்தைக் குலைத்து வருதல் கண்கூடு. 'சைவ சித்தாந்திகள்' என்று தங்களை நினைந்து கொண்டிருப்போர் பலர், 'சைவ சித்தாந்தம் எல்லார்க்கும் உரிய ஓர் அகண்டம்' என்னும் உணர்வின்றிக், கட்டுப்பட்ட கண்மூடி வழக்க ஒழுக்கங்களைச் 'சைவ சித்தாந்தம்' என்று கொண்டு வாழ்வு நடாத்துகிறார். இது தவறான கொள்கை.

இதைக் களைந்தெறிதல் வேண்டும். இதற்குச் சைவசித்தாந்த நுண்ணறிவாளர் சேவை தேவை.

'சித்தாந்தம் தொன்மை வாய்ந்ததாயின் ஆக ; சமரசம் உடைய தாயின் ஆக; பிறநலன் உடையதாயின் ஆக. இவை களைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை. சித்தாந்தம் உலக வாழ்வுக்கு இயைந்ததா? தற்காலத்துக்கு ஏற்றதா?' என்று கேட்பவர் இருக்கிறார். சைவசித்தாந்தம் உலக வாழ்வுக்கு இயைந்தது; தற்காலத்துக்கும் ஏற்றது. இங்கே சித்தாந்த முறைபற்றிச் சில நுட்பங்களைக் குறிக்க விரும்புகிறேன். விரிவு சித்தாந்த நூல்களிற் பார்க்க.

## உலக வாழ்வும் சித்தாந்தமும்

சித்தாந்தம், உலகு உயிர் கடவுள் என்னும் மூன்றுக்கும் அநாதிநித்தியம் கூறுவது என்பது மேலே காட்டப்பட்டது. உலகம் சடம்; அறிவில்லாதது. உயிர் அறியாமை விரவிய அறிவுடையது. கடவுள் அறியாமையே இல்லாதவர்; முற்றறிவுடையவர்.

அறிவுக்கு அறிகுறி இரக்கம். அறிவுடைய ஒன்று இரக்கமுடையதாயிருத்தல் இயல்பு. கடவுள் முற்றறிவுடையவராதலின், அவர் முழு இரக்கமுடையவராயிருக்கிறார். இரக்கத்தின் இயல் என்னை? அதன் இயல் பிறர் துன்பங்களைந்து நலஞ் செய்ய எழுவது என்று சுருங்கச் சொல்லலாம்.

துன்பத்துக்குப் பிறப்பிடம் அறியாமை. உயிர் அறியாமையுடையதாகலின், அது துன்பமுடையதாயிருக்கிறது. உயிர் துன்பமுடைமையான், அதன் துன்ப நீக்கத்துக்குக் கடவுளின் இரக்கம் பயன்படுகிறது. உயிரினிடத்துத் துன்பம் இல்லையேல், கடவுளின் இரக்கம் பயன்படாது கிடக்கும்.

கடவுள், உயிரின் துன்பத்தை எப்படிப் போக்குகிறார்? அவர், உயிரை மாயாகாரியமாகிய தனுகரணபுவனபோகங்களில் அதாவது உலகவாழ்வில் செலுத்தி, அதைத் தன்னைப்போல் ஆக்க முயல்கிறார். மாயாகாரியமாகிய உலகம் இல்லையாயின், கடவுள், உயிர்த்துன்பத்தை எவ்வழியில் களையவல்லார்? கடவுளின் இரக்கம் உயிருக்குப் பயன்படு



தற்கு உலகம் துணையாக நிற்கிறது. ஆகவே, மூன்றும் ஒன்றற்கொன்று இன்றியமையாததாயிருத்தல் கவனிக்கத்தக்கது. உலகுயிர், கடவுளுக்குத் தேவை. கடவுள், உலகுயிர்க்குத் தேவை. உலகுயிரின்றிக் கடவுளில்லை. கடவுளின்றி உலகுயிரில்லை. 'தானலா துலகமில்லை சகமலா தடிமையில்லை' 'சகமலா தடிமையில்லை தானலால் துணையுமில்லை' என்பன அப்பர் திருவாக்குகள்.

உயிர், மாயாகாரியமாகிய உலகவாழ்வால், அறியாமை நீங்கி, அறிவு விளக்கம் பெறுவதாகிறது. அறியாமை அழுக்கைக் கழுவும் ஆற்றல் மாயைக்கு உண்டு. அஃது அதன் இயல்பு. 'மாயாதனுவிளக்கு' என்று சித்தாந்த சாத்திரங் கூறுகிறது.

மாயை சடமாதலின், அது, தானே உயிரை அணுகாது. உயிர் அறியாமையுடையதாதலின், அதுவும், தானே மாயையுடன் சேராது. இரண்டையுங் கூட்டுதற்குத் துணைசெய்வோரே கடவுள் ஆவர். இரண்டையுங் கூட்டுவது படைப்பு என்பது. படைப்பு என்பது, இல்லாத ஒன்றை உண்டு பண்ணுவதன்று. உள்ள ஒன்றை உள்ள ஒன்றுடன் சேர்ப்பது படைப்பென்று சொல்லப்பட்டு வருகிறது. கடவுள் அறியாமையே இல்லாதவராய், முற்றறிவுடையவராதலின், அவர் மாயையையும் உயிரையும் ஒன்று சேர்க்கும் இயல்புடையவராயிருக்கிறார். அவ்வியல்பு அவர் மாட்டுள்ள இரக்கமென்க.

உயிர், கடவுள் துணையால் மாயாகாரியமாகிய தனுகரணபுவனபோகங்களென்னும் உலகவாழ்வைப் பெறுகிறது. கடவுள், மாயையைக் கொண்டு உயிருக்குப் பலவகை உடலை நல்கி நல்கி, இறுதியில் பகுத்தறிவுக்கு நிலைக்களனாகநிற்கும் மனிதப்பிறவியை நல்குகிறார். பகுத்தறிவுபெற்ற மனிதர் என் செய்தல் வேண்டும்? அவர், முழு அறிவு விளக்கம் பெற்றுக் கடவுளை அடைய முயலுதல் வேண்டும்.

'உலகவாழ்வைத் துறந்தால் முழு அறிவுபெற்றுக் கடவுளை அடையலாம்' என்றொரு போலிக்கொள்கை எப்படியோ உலகில் நுழைந்துவிட்டது. அதனால் உலகம் படும் பாட்டை

எம்மொழியால் விளக்க வல்லேன்! உயிரின் அறிவுவிளக்கத்துக்கெனக் கடவுளால் அருளப்பெற்ற தனுகரண புவன போகங்களையா துறப்பது? அந்தோ! நன்றி கொன்ற பாவம் சூழ்ந்து விடுமே!

கடவுள் எங்கும் இருக்கிறார். அவரில்லாத இடமில்லை. அவர் உலகில் உலகாக இருக்கிறார்; உயிரில் உயிராக இருக்கிறார். 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கிருப்பது நீ அன்றோ பராபரமே' என்றார் தாயுமானார். எங்குமுள்ள இறையைக் காண ஒண்ணாதவாறு மறைத்திருப்பது அறியாமை. அறியாமை நீங்க நீங்க, அவ்வவ்வளவில் இறையிருப்பும் விளங்கிக்கொண்டே போகும். முழு அறியாமை நீக்கத்தில், இறை எங்குமுள்ள உண்மை புலனாகும். எங்கும் இறையைக் காண உலகிடைப் போந்த உயிர்கள், உலகைத் துறப்பது எனில், அப்பகுதியிலுள்ள இறையை அவைகள் காணாதொழிவதாகும். ஆகவே, 'உலகவாழ்வைத் துறத்தல்' என்னும் உணர்வுக்கே இடந்தருதல் கூடாது. 'உலகவாழ்வு, நம்பொருட்டுக் கடவுளால் அருளப்பெற்ற கொடை' என்னும் உறுதியில் நிற்றல்வேண்டும்.

பகுத்தறிவால், 'உலகவாழ்வு கடவுள் கொடை' என்பதை உணர்ந்து வாழ்வதே சிறப்பு. அவ்வுணர்வின்றி வாழ்வது வாழ்வாகாது. அது விலங்கு வாழ்வாகும். விலங்கு வாழ்வு துன்பத்தைப் போக்காது; கடவுளை அடையச் செய்யாது. அது பிறவித்துன்பத்தைப் பெருக்கிக்கொண்டே போகும். இங்கே, 'கண்ணுதலோன் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி - எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி - விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் - எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர் - பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன் - புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் - பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் - கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் - வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச் - செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள் - எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் - மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று



வீடுற்றேன்' என்று வாதவூரடிகள் அருளியுள்ள அமுத வாக்கை நோக்குக; அதைப் பருகுக; பருகிப் பருகி ஆண்டவன் சீரைப்பாடுக. பிறவித்துன்பம் நீங்கும்.

'உலகவாழ்வு கடவுள் கொடை' என்னும் உணர்வுடன் வாழ்ந்து, பிறவிப்பெருங்கடல் நீந்தி, இறைவனடி சேர்தலாகிய இறவாத இன்பநிலைபெற உயிர்கள் உழைத்தல் வேண்டும். அவ்வுழைப்பு முறைகள் பெரியோர்களால் அருளப்பட்டுள்ளன. அவைகளிற் சிலவற்றை யாதல் பின்னே விளக்குவன். உலகு உயிர் கடவுள் என்னும் முப்பொருட்கும் உண்மை கூறும் சித்தாந்தம்—'தனுகரண புவனபோகங்களால் உயிர் அறிவு விளக்கம் பெறுதல் வேண்டும்' என்று அறிவுறுத்தும் சித்தாந்தம்—உலகுக்கு இயைந்ததா அன்றா என்பதை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

## தற்காலமும் சித்தாந்தமும்

இனிச் சித்தாந்தம் காலத்துக்கு ஏற்றதாகுமா என்பதைச் சிந்திப்போம். மூன்று பொருட்கும் உண்மை கூறும் சித்தாந்தம் அவ்வக்காலத்துக்குரிய முறையில் பயன்பட்டு வரும் என்பதில் ஐயமில்லை. 'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளே-பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே' என்று மாணிக்கவாசகரும், 'காலமொடு தேசவர்த்த மான மாதி கலந்துநின்ற நிலைவாழி கருணை வாழி' என்று தாயுமானாரும் அருளியிருத்தலை ஊன்றிப் பார்க்குமாறு அறிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதுமைக்குப் புதுமையாகவும், காலதேசவர்த்தமானமாகவும் இருக்கும் இறையைக்கூறுஞ் சித்தாந்தத்தை, எக்காலத்துக்கும் உரிய ஒன்று என்று சொல்லுதல் மிகையாகாது. காலத்துக்கேற்றவாறு பயன்படச் சித்தாந்தம் சித்தமாயிருக்கிறது. அதை அவ்வாறு பயன்படுத்தத் தற்காலச் 'சித்தாந்திகள்' சித்தமா யிருக்கிறார்களா? காலத்துக் கேற்ற முறையில் அகண்ட சித்தாந்தத்தைப் பயன்படுத்த முயல வேண்டுவது அறிஞர் கடமை.

தற்கால வாழ்வுக்கு வேண்டப்படுவன பல. அவைகளின் உயிராக உள்ளன சில. அச்சில—ஒரு தெய்வ வழிபாடு, உரிமை உணர்வு, சமரச நோக்கு, பிறர்க் குழைத்தல், சகோதர நேயம், இன்ப வாழ்வு முதலியன.

ஒரு தெய்வ வழிபாடு, சித்தாந்தத்துக்கு உடன் பாடு. இஃது உலகில் நானுபக்கங்களிலும் தோன்றிய பெரியோர் பலராலும் அறிவுறுத்தப்பட்டது. நந்தமிழ் நாட்டுப் பெரியோர்களும் ஒரு தெய்வ வழிபாட்டையே அறிவுறுத்தினார்கள். தெய்வம் ஒன்றாயிருக்கும்போது, உண்மை கண்டவர் எங்ஙனம் பல தெய்வ வழிபாடு கூறுவர்? 'உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே' என்றும், (அப்பர்) 'ஒன்றென் றிரு தெய்வம் உண்டென்றிரு' (பட்டினத்தார்) என்றும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' 'ஒன்று கண்டீர் உலகுக்கு ஒருதெய்வம்' (திருமூலர்) என்றும் எழுந்த திருவாக்குகள் பல. பெரியோர் அனைவரும் ஒரு முகமாக ஒரு தெய்வ வழிபாட்டை வலியுறுத்தியிருப்பப் பல தெய்வ வழிபாடு எப்படிக் கால் கொண்டது? இதற்குப் பலர் பலவாறு கூறுப. அப்பலவற்றில் தலைப்பட வேண்டுவதில்லை. இரண்டொன்றை ஈண்டுப் பொறித்தல் சாலும்.

கடவுளுக்குப் பல மொழியில் பல பெயர்கள் வழங்கப் பட்டன. அவருக்குப் பல இயல்களுஞ் சொல்லப்பட்டன. பெயர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வம் என்றும், இயல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வம் என்றும் கல்வி யறிவுத் தெளிவில்லாதவர்களால் கொள்ளப் பெற்றன. சமயவாதிகளும், மடாதிபதிகளும், புரோகிதர்களும், குறுகிய நோக்குடையவர்களும், இவரனைய பிறரும், தங்கள் நலங் கருதி, ஏழைமக்கள் கல்வியறிவுத் தெளிவின்றிக் கொண்ட பொய்க் கொள்கையை, வாதப் போர்களாலும், பிறவற்றாலும் நிலைபெறுத்திவிட்டார்கள். இவ்வாறு, பல தெய்வ வழிபாடு உலகிடைக் கால்கொண்டது.

கடவுள் நாமரூப மில்லாதவர். அவரை எம்மொழிப் பெயரால் அழைத்தாலென்ன? 'ஒருநாமம் ஒருருவம் ஒன்று மிலாற்கு ஆயிரம்-திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்



டாமோ' என்று மாணிக்கவாசகனார் அருளியுள்ளார். ஆயிரம் திருநாமத்துக்கும் ஆயிரம் தெய்வம் கொள்ளவேண்டுமென்பதா அப்பெரியார் கருத்து? ஆண்டவன் இயல்களும் பலவாறு சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் இயலையும் ஒவ்வொரு தெய்வமாகவா கொள்வது?

ஆண்டவன் இயல்களுள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது ஒன்று. இவ்வியலை விஷ்ணு என்று விளம்புகிறோம். விஷ்ணு என்னுஞ் சொல் வியாபகம் என்னும் பொருளுடையது. ஆண்டவன் என்றும் இளையனாய் அழகனா யிருத்தல் மற்றுமோரியல். இவ்வியலை முருகு (முருகன்) என்று சொல்கிறோம். முருகு என்னுஞ் சொல்லுக்கு இளமை அழகு முதலிய பொருள்களுண்டு. ஆண்டவனது பிரணவாகாரம் விநாயகமூர்த்தம் என்றும், எல்லாவற்றையும் இயக்குதல் நடராஜமூர்த்தம் என்றும், மங்களமாய் நன்மையாய்த் தூய்மையாயிருத்தல் சிவம் என்றும் கொள்ளப்பட்டன. மற்றும் பல இயல்களுக்கும் மற்றும் பல பெயர்கள் சூட்டப்பட்டன. இவ்வாறு இயல்களை ஒட்டியும் ஆண்டவனுக்குப் பல பெயர்கள் பிறந்தன. பெயர்களின் பொருள் ஒன்றே. இந்நுட்பந் தேறாது, ஒவ்வொரு பெயரை ஒவ்வொரு தெய்வமாக் கொண்டு, வாதப்போர் நிகழ்த்துவது அறியாமை.

சித்தாந்த நுட்பங்கள் பரவாத இந்நாளில், கல்வி அறிவு இல்லாதவர்களிடைப் பல தெய்வ வழிபாட்டுணர்வு வழி வழியே படிந்து படர்ந்து வருகிறது. அதைப் போக்க அறிவும் அன்புமுடைய ஒப்புரவாளர் உழைத்தல் வேண்டும்.

ஒரு தெய்வ வழிபாடு உரிமை உணர்வை வளர்த்து வரும். பல தெய்வ வழிபாடு அடிமை உணர்வைப் பெருக்கும். உரிமை உணர்வு வாழ்விற்கு இன்றியமையாதது. அவ்வுணர்வு வாழ்வுக்கு ஒளிபோன்றது. ஒளி காலாத இடம் சாக்கடையாகும்; நரகக் குழியாகும். தற்காலச் சைவ உலகம் எப்படி யிருக்கிறது? தற்காலச் சைவ உலகில் உரிமை உணர்வு அருகிவருதல் கண்கூடு. சைவ நூல்களில் மட்டும் உரிமை ஒளி கான்றிக்கொண்டிருக்கிறது.

தார். அச்செயல்களின் நிகழ்ச்சிக்கு ஊற்றா யிருந்தது எது? அம்மையாரது உரிமை உணர்வன்றோ? மங்கையர்க்கரசியார் வாழ்வில் உரிமை மணம் கமழ்ந்துகொண்டிருந்தது.

இத்தகை உரிமை, பின்னே பெண்ணுலகினின்றும் பிடுங்கப்பட்டது. பெண்ணடிமை எங்கணும் மல்கிவிட்டது. பெண்ணொரு பாகனை-அம்மையப்பனை-வணங்கும் உலகிலும் பெண்ணடிமை நுழைந்தது வியப்பே. பெண்ணடிமை கொண்ட உலகுக்குப் பெண்ணாகிய பெருமான் திருவருள் எப்படிக் கிடைக்கும்? 'பெண்ணுரிமையின் வீழ்ச்சி ஆணுரிமையின் வீழ்ச்சி' என்பதைத் தெளிந்து இனியாதல் ஆணுலகம் நடப்பதாக. யான் எழுதிய 'பெண்ணின் பெருமை' என்னும் நூலில் பெண்ணுரிமையை விரித்துக் கூறியுள்ளேன்.

உரிமை நமது உயிர். அதை எக்காரணம் பற்றியும் இழந்து வாழ்தல் கூடாது. உரிமையற்ற வாழ்வு வாழ்வாகாது. உரிமை வாழ்வே வாழ்வு. இதற்கு உரிமைச் சிவத்துடன் இயைந்த வாழ்வு வேண்டற்பாலது.

சமரச நோக்கு, உரிமை உணர்வின் சேய். உரிமை உணர்வு இல்லாத இடத்தில் சமரச நோக்குப் பிறத்தல் அரிது. சைவம் சமரசமுடையது என்பது உண்மை. அச்சமரசம் இப்பொழுது எங்கே இருக்கிறது? அஃது ஏட்டில் இருக்கிறது; வாக்கில் இருக்கிறது; செயலில் இருக்கிறதா? சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றைக் கடந்த சிவம் வீற்றிருந்தருளும் திருக்கோயில்களிலாதல் சமரசம் உண்டா? சாதியற்ற சிவத்தைச் சாதிமயமாக்கிய நாட்டுக்கு எங்கிருந்து உய்வு வரும்? 'எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவன் என்று - எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பது 'சைவசமய நெறி'. பாட்டு நன்றாயிருக்கிறது! பாட்டுக்கேற்ற நடை உண்டா?

சாதி முதலிய பேய்கள் தலைவிரித்தாடியபோது நாயன்மார்கள் தோன்றி அப்பேய்களை ஓட்டமுயன்றார்கள். 'சாத்திரம்பல பேசும் சழக்கர்காள் - கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்' என்று அப்பர் இடித்துரைத்தார். 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும், ஆதமிலி



நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு, பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக், கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே' என்று வாதவூரர் அழுதார். அப்பருக்கும் வாதவூரருக்கும் திருவிழாக்கள் செய்யப்படுகின்றன. அவர்கள் வாக்குக்கோ? வெட்கம்! வெட்கம்! திருநாளைப்போவார், அப்பூதியடிகள், திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடிகள் முதலியோர் வரலாறுகள் படிக்கப்படுகின்றன. ஆனால், நடக்கையோ? எல்லா மரபினரையும் அடியவராகக் கருதி அவர்கட்கெல்லாம் 'அடியேன்' 'அடியேன்' என்று நம்பியாரூரர் பாடினார். அவ்வடியவர் திருவுருவங்கள் திருக்கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன. திருத்தொண்டத்தொகை பாராயணமும், திருக்கோயில் வழிபாடும் பெருமிதமாக நடைபெறுகின்றன. ஆனால், வாழ்வில் சாதிப்பித்துமாய்ந்ததா? மரம், பாம்பு, சிலந்தி, யானை, பறவை, விலங்கு முதலியவற்றிற்கு முத்திகொடுத்த கருணை வள்ளல் எழுந்தருளியுள்ள இடத்திலுமா சாதிவேற்றுமை? கொடுமை! கொடுமை! சாதிவேற்றுமை தொலைந்து, சமரசம் பரவும் வரை, சைவம் ஓங்கி வளராது. சாதிச் சைவத்துக்குச் சிவனருள் துணை செய்யாது. மனிதரை மனிதராகப் பாவியாத இடத்தில் சிவனருள் எங்ஙனம் நிலவும்? மனிதரை மனிதராக நினையாத ஒருவன் எங்ஙனஞ் சைவனாவன்? சாதி முதலிய களைகளைக் களைந்து, சைவவான்பயிரை ஓம்ப இளைஞர்கள் ஊக்கங் கொண்டெழுதல் வேண்டும். இளைஞர்களே! சைவ இளைஞர்களே! சைவ உலகை நோக்குங்கள்; சைவ உலகம் சவலையுற்றிருப்பதை உணருங்கள்; 'உரைசேரும் எண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனி பேதம் - நிரைசேரப் படைத் தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில்' என்று இளங்குழந்தை - ஞானமூர்த்தி - அருளிய மொழியை உன்னுங்கள்; எங்குஞ் சிவம் கோயில் கொண்டிருத்தலைத் தெளியுங்கள்; எங்குமுள்ள சிவத்துடன் சம்பந்தம் பெறுவதன்றோ சைவம்? அச்சிவ சம்பந்தம் இப்பொழுது எந்நிலையிலிருக்கிறது? சாதி சம்பந்தமன்றோ இப்பொழுது உலவுகிறது? சைவம் எங்கே? அனலிடை

நின்ற சைவம் - புனலிடை நின்ற சைவம் எங்கே? நீற்றறையில் நின்ற சைவம் - கடலில் நின்ற சைவம் எங்கே? அச் சித்த சைவம் எங்கே? எங்கே? சாதிச் சைவமன்றோ இப்பொழுது நெளிந்துகொண்டிருக்கிறது? நினைக்க நினைக்க உள்ளம் உருகுகிறது; ஊன் குழைகிறது; கண்ணீர் பெருகுகிறது. சாதி மதம் மொழி நாடு முதலிய அஞ்ஞானப்புற்றுக்கள் சைவத்தின்மீது - அன்பின்மீது - எழும்பிப் படர்ந்து விட்டன. அவைகளைத் தகர்க்க எழுங்கள்; 'சைவம் சமரசமுடையது; அஃது எவர்க்கும் உரியது; அன்பே சிவம்' என்னும் உண்மையைப் பறைசாற்ற எழுங்கள்; ஞானசம்பந்தர் மறைக்காட்டினின்றும் வீறு கொண்டு மதுரைக்கு எழுந்ததை நினையுங்கள்; மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை எதிர்நோக்கிய வேட்கையை எண்ணுங்கள்; குலச்சிறையார் விரதத்தையும் வீரத்தையும் கருதுங்கள்; உங்கட்கு எழுச்சி தானே பிறக்கும். முதலாவது திருக்கோயிலில் சாதிப்பேயை ஓட்ட உறுதிகொள்ளுங்கள்; பிற இடங்களிலுள்ள மற்றப் பேய்கள் தாமே ஓடும். 'என்றும் நாம் யாவர்க்கும் இடைவோமல்லோம் இருநிலத்தில் எமக்கு எதிராவார் யாருமில்லை' என்று அஞ்சாநெஞ்சங்கொண்டு எழுங்கள்; 'அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும் ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும், எப்பதமும் எங்கணுநான் சென்றே எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும், செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம் திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும், தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும் தலைவ நினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே' என்று வேண்டுதல் செய்து எழுங்கள்; சிவசோதி உங்களுக்கு வழி காட்டும்; நால்வர் துணை உங்களுக்குக் கிடைக்கும்; அஞ்சாது எழுங்கள்; எழுங்கள்.

சமயத்தவர் உணர்வில் சமரசம் பதிந்தால், உலகில் பிற சமரசத் துறைகள் தாமே வளம்பெறும். ஆதலால், சமரசத் துறைகளின் கூறுபாடுகளை ஈண்டு விளக்கவேண்டுவதில்லை.



சமரச நோக்கு வளர வளரப் பிறர்க்குழைக்கும் பேறு கிடைக்கும். பிறர்க்குழைப்பதன்றோ பிறவிப்பயன்? 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றார் திருமூலர். தன்னலம் நாடாது பிறர்க்கு உழைக்கும் உள்ளம் சிவத்துக்குரிய சிறந்த கோயில். பிறர் நலம் நாடி உழைத்தல் சிறந்த சிவத்தொண்டு. சைவம் ஓங்கவேண்டுமானால், சைவர் பிறர் நலம் நாடிச் சமரச நோக்குடன் உழைப்பவராதல் வேண்டும்.

முன்னைப் பெரியோர்கள் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றும் பிறர் உடைமை என்று கருதி வாழ்வதையே பிறவிப் பேறாகக் கொண்டார்கள். 'யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை' என்று பெரியபுராணம் அறிவுறுத்துகிறது. இப்பொன்மொழியின் உள்ளக் கிடக்கையைத் துருவித்துருவிச் சிந்தித்துச் சிந்தித்து அதன் பொருளாழத்தை உணர முயல்வோமாக.

இக்காலச் சைவப் பெரியார் வாழ்வினுள் ஆறுமுகநாவலர் வாழ்வு சைவ உலகுக்கு எடுத்துக் காட்டாக நிற்கிறது. சிவத்தொண்டுக்கெனத் தமது வாழ்வையே அர்ப்பணஞ் செய்தவர் நம் நாவலர் பெருமான். காலத்துக்கேற்ற தொண்டுகள் பல அவரால் செய்யப்பட்டன. நாமும் இக்காலத்துக்கேற்ற முறையில் தொண்டு செய்தல் வேண்டும்.

விஞ்ஞானகலர் பிரளயாகலரைத் தம்மைப்போலாக்கவும், பிரளயாகலர் சகலரைத் தம்மைப்போலாக்கவும் முயன்ற வண்ணமா யிருக்கின்றார் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இக்கூற்றின் உட்கிடக்கை என்னை? அறிவால் உயர்ந்தோர் அறிவால் தாழ்ந்தோரைத் தமது நிலைக்குக் கொண்டுவர உழைத்தல் வேண்டுமென்பதன்றோ? இச்சீரிய உண்மையை உணர்ந்து சைவப்புலவர்கள் நடப்பார்களாக.

தில்லைக்கூத்தன் ஐந்தொழில் புரிகின்றான். எவர்பொருட்டு அவன் ஐந்தொழில் புரிகின்றான்? தன்பொருட்டா? இல்லை. அவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன். உயிர்கள் பொருட்டே அவன் ஐந்தொழில் புரிகின்றான். அவனை வணங்கி அவனை அடைய விரும்புவோரும், தம்பொருட்டு வாழாது பிறர் பொருட்டு வாழ உளங்கொள்ளல்வேண்டும். பிறர்

பொருட்டு வாழ்தலாவது பிறர் நலன் நாடிக் காலத்துக்கேற்ற தொண்டு செய்வது. தன்னலங் கருதாது பிறர்க்கு உழைக்குந் தொண்டர் கூட்டம் பெருகப்பெருக உலகம் பலவழியிலும் சீர்திருத்தம் பெறும்.

பிறர்க்கு உழைக்க உழைக்கச் சகோதரநேயம் பெருகும். அவ்வுழைப்பால் உயிர்க்கும் உயிர்க்குமுள்ள தொடர்பு விளங்கும். அத்தொடர்பைக் கூறிட்டிருப்பது அஞ்ஞானம். அஞ்ஞானத்தை ஆண்டவனருளால் போக்க முயலல்வேண்டும். இதுபற்றியே அப்பரெம்பெருமான், 'கூற்றாயின வாறு விலக்ககிலீர்' என்று இறைவனை வேண்டித் தமது தமிழ்மறையைத் தொடங்கினார் போலும்! கெடிலநதிக்கரையில் பிறந்த அச் செம்மொழி வாழ்க; வாழ்க.

'கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன், ஏற்றாயடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும், தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட, ஆற்றேன்அடியேன் அதிகைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே' என்பது திருவாக்கு. இத்திருவாக்குக்கு விரிவுரை கூறப் புகுகிறேனில்லை. எடுத்த சகோதரநேயத்துடன் இதனை இயைபுபடுத்தும் அளவில் நின்று மேற் செல்வேன்.

'அதிகைக் கெடில வீரட்டானத் துறைஅம்மானே! கொடுமைபல செய்தன நான்அறியேன்; தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடுதொடக்கி முடக்கியிட அடியேன் ஆற்றேன்; ஏற்றாயடிக்கே இரவும் பகலும் எப்பொழுதும் பிரியாது வணங்குவன்; கூறு ஆயினவாறு விலக்ககிலீர்' என்று நாவுக்கரசர் ஆண்டவனை நோக்கி வேண்டுதல் செய் திருத்தலைக் காண்க.

சிவம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருப்பது. சிவம் இல்லாத இடம் இல்லை. எவ்வுயிர்க்கும் உயிராயிருப்பது சிவம். சிவம் எல்லா உயிரிலும் இருத்தலால், எல்லா வுயிரும் சகோதரம் என்பதில் ஐயமில்லை. (தொடரும்)

சைவ மங்கையர் மகாநாட்டுத்

# தலைமை உரை

[வித்வான் - டி. என். தாணு அம்மாள்]

**அன்பார்ந்த சகோதரிகளே!**

**முன்னுரை**

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 29-ம் ஆண்டு நிறைவு விழாவின் சைவமங்கையர் மகாநாட்டிற்கு என்னைத் தலைமைவகிக்கக் கேட்டுக்கொண்டவர்கள் இந்தச் சமாஜத்தின் அமைச்சராகிய சைவத் திருவாளர் - ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L. அவர்கள். இந்நண்பர் கொடுத்துள்ள இப்பணியை மேற்கொள்ளாது மறுப்பது சிறிதும் தகாதென்றே நினைத்து ஒப்புக்கொண்டேன். அவர்களுடைய மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருப்பது சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் அபிவிருத்திக்குரிய பெருங்கருத்துக்களே யாகும். சைவ சமயத்தில் நம்மவர்கள் ஈடுபட்டு அதன் பயனை அடைய வேண்டுமென்று அவர்கள் சதா முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்; இதற்குச் சாதகமாக, சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் சைவத் திருமுறைகளையும் யாவரும் வாங்கிக் கற்றுணருமாறு அடக்கவிலைப் பதிப்புக்கள் வெளியிடுவதில் ஓயாது உழைத்து வருகிறார்கள். இவ்வாறு அரும்பெரும் பணியை ஆற்றிவரும் கனம் முதலியாரவர்களுடைய கட்டளையை யாரேனும் மறுக்கத் துணிவார்களா?

என் தகுதியை நோக்குவதாயின், யான் இப்பதவியை ஏற்று நடத்துதற்குச் சிறிதும் திறமையில்லாதவளென்பதை

நன்குணர்வேன். எனினும், திருவருளின் துணைகொண்டும், இங்கே கூடியிருக்கும் சகோதரிகளுடைய அன்பின் துணைகொண்டும், ஒருவாறு எனது கடமையை நிறைவேற்றலாமென்று நம்புகிறேன்.

இன்று நாம் கூடியுள்ள இத் திருவதிகைமாநகர் மிகவும் தொன்மை வாய்ந்தது; சைவ சமயிகளாகிய நமக்குப் புண்ணியஸ்தலமாகவும் திவ்ய க்ஷேத்திரமாகவும் உள்ளது; சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. ஒரு காலத்தில் சமண மதம் ஓங்கிச் சைவந் தாழ்ச்சியுற்று நின்றது. அப்போது மருணீக்கியார் 'தருமசேனர்' என்னும் பெயர்பூண்டு, சமண மதத்திற் புகுந்து, அச்சமயத்தாரில் தலைமைபெற்று விளங்கினார். அவரைச் சூலை நோயில் அகப்படுத்தி இறைவன் ஆட்கொண்டருளிய பதி இப் பழம்பெரும் பதியேயாகும். அவர் தமக்கையான திலகவதியார் இந்நகரிலேயே தவக் கோலம் பூண்டு ஆண்டவனுக்கு வேண்டும் தொண்டுபுரிந்து முத்தியடைந்தனர். சைவசமய சரித்திரத்தில் இத்துணைப் பெருமைவாய்ந்த இந்நகரைத் தெரிசிக்கும்படி அருள்புரிந்த எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இத் திருவதிகை நகரிலே சைவசித்தாந்த மகாசமாஜத்தின் மகாநாட்டினைக் கூட்டுவித்து அதனைப் பெருஞ் சிறப்புடன் நடைபெறச் செய்யும் சைவத் திருவாளர் - தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு நம் அனைவரது நன்றியும் உரியதாகின்றது.

இந்தப் புண்ணியஸ்தலத்தில் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் மகாநாடு கூடுதல் தகுதியுடையதேயாகும். இதைக் காட்டிலும் மிக்க தகுதியுடையதாக வேறொரு திருப்பதியையும் கூறுதல் ஏலாது. அப்பர்சுவாமிகளிடத்தே பிற சமயாசாரியார்களிடம் காணப்பெறாத பெருஞ்சிறப்பு ஒன்று உண்டு. இவர் புறச்சமயத்திற் புகுந்துவிட்டபோதிலும் அவரை வலிந்து ஆட்கொண்டு அவரது இன்தமிழ்ப் பாமாலைகளைப் புனைந்து 'நாவுக்கரசு' என்னும் அருமைத் திருநாமத்தினையும் சிவபெருமான் சூட்டியருளினர். இவ்வாறு அனுக்கிரகம் புரிந்த ஸ்தலம் இத்திருவதிகையாதலினாலே, இந்தப் பதியிலே இறைவனது திருவருள் பரிபூரணமாக விளங்குவது என்று கொள்ளலாம். அன்றியும், நம் இனத்தைச் சார்ந்த மங்கையாகிய திலகவதியார் 'அடியேன்பின் வந்தவனை-ஈண்டு வினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்ய, இறைவன் 'அவ்வாறே அருள்புரிவோம்' என்று கனவின்கண் உணர்த்தியருளினார். நாம் இன்று இம் மகாநாட்டிற் செய்துகொள்ளும் விண்ணப்பங்களையும் சிவபெருமான் செவியேற்று அருள்புரிவரென்பது ஒருதலை.



ஆனால், சகோதரிகளே! எவ்வகையான விண்ணப்பங்கள் நாம் செய்துகொள்ளுதல் வேண்டும்? இதற்கு நமக்குள்ள குறைபாடுகள் யாவை யென்பதைத் தெளிவா யுணர்ந்து கொள்ள முயலுவோம்.

## சைவ சமயம்

குறைபாடுகளனைத்திலும் மிக முக்கியமானதும் இச் சைவ சித்தாந்த மகா சமாஜம் மேற்கொண்டுள்ள முயற்சிகளோடு மிக நெருங்கிய தொடர்புள்ளதுமான ஒன்றினை முதலாவதாக நாம் கூறுதல்வேண்டும். அதுதான் சைவ சமயம் பற்றியதேயாகும்.

சமயம் என்பதன் சொற்பொருளைக் குறித்துச் செய்யும் ஆராய்ச்சி யெல்லாம் மொழிநூற் புலவர்களுக்குரியதே யன்றிச் சமயத்தைப் பிரசாரஞ் செய்யவேண்டுமென்று முன் வந்திருக்கும் இம்மகாநாட்டின் ஆலோசனைக்குரியதன்று. 'சமுதாய வாழ்க்கையின் அஸ்திவாரம் போன்றது சமயம்' என்ற உண்மைதான் நாம் வற்புறுத்துதற்குரியது. மனித வாழ்க்கை என்று ஆரம்பமானதோ, அன்றே சமயமும் ஆரம்பமாயிருக்குமெனப் பகரலாம். சமயமில்லாத நாட்டினரையோ கூட்டத்தாரையோ காண்பது அரிதாகும்.

ஆனால் ஜனங்களது அறிவு, செயல் முதலியவைகள் பலதரத்தனவாயுள்ளன. அவற்றிற்கு ஏற்ப, அவர்கள் மதக்

கொள்கைகளும் பலதிறத்தனவாயின. எனவே, சமயங்களும் பலவாயின. ஆனால் எல்லாச் சமயங்களும் மக்கள் உயர்நிலையடையவேண்டு மென்னும் பெரு நோக்கமுடையனவே. அவை எல்லாவற்றிற்கும் அறநெறி உண்டு. அவ்வறநெறியும் பல திறத்தனவாயுள்ளன.

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு"

என்று தமிழ் வேதம் முழங்குகின்றது. சமுதாயத்தின் பொதுவுள்ளத்தைச் சமயம் வெளிப்படுப்பதுபோல, வேறு யாதுங் காட்டமாட்டாது. சமுதாயத்தின் உயர்வு தாழ்வுகள் சமயத்தின் உயர்வு தாழ்வுகளிற் பிரதிபலிக்கும். இதனால் இகவாழ்விற்கே சமயமானது எத்துணை இன்றியமையாத தென்பது விளங்கும்.

**சைவசமயத்தின் தொன்மையும் பெருமையும்**

நமது சைவ சமயமானது தமிழ் மக்களது தொன்மைக்கும், பெருமைக்கும், நாகரிகச் சிறப்பிற்கும் ஏற்றபடி அமைந்துள்ளது. சங்க காலத்திலே சைவ சமயம் சிறந்து விளங்கிற்று என்பது நமது புராதன இலக்கியங்களால் அறியலாம். அந்நூல்களின் இடையிடையே சிவபெருமானது புகழ்கள் காணப்படுகின்றன. அவற்றின் தொடக்கத்தில் வரும்வணக்கச்செய்யுள்களிற் பெரும்பாலன சிவபெருமானைப் பற்றியனவே. அன்றியும் சிவபெருமானுக்குரிய திருக்கோயில்களும் சைவத்தாபதர்களுக்குரிய பள்ளிகளும் அக்காலத் திருந்தனவாக நாம் அறிகின்றோம். அக்காலத்து வேறு பலமதங்களும் தமிழ் நாட்டில் இருந்தபோதிலும் சைவசமயமும் தக்க கௌரவத்தோடு நிலவியதென்பது உறுதி. இவ்வாறு புலவர்களாலும் அறிஞர்களாலும் போற்றப்பட்ட சமயமானது ஏழாம் நூற்றாண்டில் முன்பின் இல்லாத பெருஞ் சிறப்பெய்திற்று. சைவசமயாசாரியர்கள் தமிழ் நாட்டில் அவதாரஞ் செய்தனர். பக்திப்பிரவாகமானது தமிழ்நாடு முழுவதும் பரந்து நிரம்பியது. பிற சமயங்களெல்லாம் அவ்வெள்ளத்தில் அமிழ்ந்து போயின. இந்தப் பக்தியின் விளைவாக இனிய கானமும், உள்ள முருக்கும் தெள்ளிய



பண்ணிறைந்த பாடல்களும் தோன்றின. இவ்வருட்பாடல்கள் திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இத்தெய்வப் பாடல்களாலும் சமயாசாரியர்களாலும் சைவசமயம் தமிழ் மக்களிடையே வேரூன்றி வளர்ந்து தழைத்தோங்கியது.

சைவசமயாசாரியர்களை யடுத்து சாஸ்திர அறிஞர்கள் தோன்றினர். அவர்களால் அறிவினை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி பெருகி வளர்ந்து சைவசித்தாந்த சாஸ்திரங்கள் இயற்றப்பெறலாயின. சைவசமய வுண்மைகள் சாஸ்திர வாயிலாக அறுதியிடப்பெற்றன. இவ்வுண்மைகளைப் பொதுப்படையாக இங்கே குறிப்பது மிகையாகாது.

**சைவசமயத்தின் இயல்பு**

இவ்வுலகுக்கும் அதன்கண் வாழும் நமக்கும் தலைவன் ஒருவன் உளனென்பதை நினைந்து அத்தலைவனைப் பதியெனவும், உயிர்த்தொகுதியைப் பசுவெனவும் இவ்விரண்டிற்கும் புறம்பாயுள்ள உலகமுதலிய தோற்றங்களைப் பாசமெனவும் வழங்குவர். எனவே, சித்தாந்தத்தின் உண்மைப் பொருள்கள் பதி, பசு, பாசம் என்னும் மூன்றுமாகும். இவை எக்காலத்தும் நிலை நிற்பன. ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியவை யல்ல. பதியென்பது உயிர்த்தொகுதிகளை யெல்லாம் காப்பதின் காரணமாக எல்லாம் வல்ல இறைவனைக் குறிக்கும் ஒரு சொல். பசுவென்பது பாச பந்தத்திலே கிடந்துழலும் உயிர்த்தொகுதியைக் குறிக்குஞ் சொல். பசுக்கள் எண்ணிறந்தன. அவை சிற்றறிவும் சிறுதொழிலு முடையன; கடவுளால் உணர்த்தப்பெறின் உணரும் தன்மையன; பதியோடும் பாசத்தோடும் தொடர்புடையன. பசு பளிங்குபோலச் சார்ந்ததன் வண்ணமாக நிற்கும். பாசம் என்பது ஆன்மாக்கள் இறைவனை அறியவொட்டாது மறைத்து நிற்கும். பதியின் அருள்நோக்கால், ஆன்மாக்களைப் பிணிக்கும் தன் ஆற்றல் குறையுந் தன்மையுடையது. இது ஆணவம், கன்மம், மாயை என்னும் முத்திறத்தது. இவற்றை மும்மலமென்றுங் கூறுவர். இவைகளை நீக்கி இறைவனோடு இரண்டறக் கலப்பதே பிறவியெடுத்ததன் பயனும் என்பர்.

இங்ஙனமாகப் புலவர்களாலும் சமயாசாரியர்களாகிய பக்திச் செல்வர்களாலும் மெய்கண்ட தேவராதிய சாஸ்திர ஞானிகளாலும் நிறுவப்பட்ட சைவ சமயமானது இப்போது எந்நிலையி லுள்ளது?

**சைவசமயத்தின் தற்கால நிலை**

இதன் விடையை நாம் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். தற்காலத்தில் ஒரு பரபரப்பு எங்கும் காணப்படுகிறது. நமது முன்னோர்கள் சித்த சமாதானத்துடனும் அமைதியுடனும் வாழ்ந்து வந்த வாழ்வு நமக்கு இல்லாது போயிற்று. நமது நாகரிகத்தோடும் கல்வியறிவோடும் ஒத்திருந்த பிற மதத்தாருடன் அகங்குளிர வாதஞ் செய்துவந்த காலம் பழங்காலமாய் விட்டது. நமது வாழ்வு பல துறைகளிலும் வேறுபட்டு விட்டது. இதற்குக் காரணம் யாது? நமது நாகரிகத்தோடு போரிடுதற்குப் படையெடுத்து வந்திருக்கின்ற ஐரோப்பிய நாகரிகமே காரணமாகும். இந்த நாகரிகமானது நம்மை வசீகரித்து விட்டது. நாம் அதன் சுழலில் அகப்பட்டு அமிழ்ந்து விட்டோம். நமது மதப்பற்றும் பிற வழக்க ஒழுக்கங்களும் சிறிது சிறிதாக அழிவெய்தி வருகின்றன. யௌவனத்திற்குரிய பரிபூரண ஆற்றலோடும் கூடிய இந்த நாகரிகம் மட்டுமன்று நம்மை இப்போது பாதித்துக் கொண்டிருப்பது. வேறொரு மிக முக்கியமான துணையை இந்நாகரிகம் தேடிக்கொண்டிருக்கிறது. அது யாதெனில், மேலை நாடுகளில் பல நூற்றாண்டுகளாக நுண்ணிதின் ஆராய்ச்சி செய்து போற்றப்பட்டு வருகின்ற இயற்கைத் தத்துவ சாஸ்திரமே யாகும். இந்தச் சாஸ்திர ஞானமானது நம்மிடையிலும் பரவிக்கொண்டு வருகிறது. இதனால் பல பல நூற்றாண்டுகளாக நம்மவர்கள் நம்பிக்கை கொண்டிருந்த பல விஷயங்கள் நம்மனத்தை விட்டு அகன்றுபோயின. நம் முன்னோர்கள் என்றும் மாறாத உண்மைகளெனக் கொண்டிருந்தன பலவும் இப்பொழுது அங்கீகரிக்கத் தக்கனவல்லவென்னும் உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. இவ்வுண்மைகளைப் பக்க பலமாகக் கொண்டிருக்கும் நமது சமயத்தின் மூல வேரும் சிறிது சிறிதாக அசைந்துகொண் டிருக்கிறது. சமயப் பற்றும் ஈஸ்வர பக்தியும் இடையறாது ஊற்றெடுத்தொழுகும் நம்மவர்கள் உள்ளமும் இப்பொழுது ஊற்றுக்கண் அடைத்து உலரத் தொடங்கி விட்டது.



இவ்விரண்டையும் தவிர இவற்றோடுகூட நம் தேசத்திலே வந்து புகுந்த கிறிஸ்துவ சமயமும் நம் சமயத்தைச் சில காலத்திற்கு முன் துர்ப்பலமாக்கத் தொடங்கிற்று. ஆனால் அதன் வலியெல்லாம் இப்பொழுது அடங்கிவிட்டது. அதுபற்றிய கவலையால் நாம் இப்போது வருந்தவேண்டிய ஆவசியகம் இருப்பதாகத் தோன்றவில்லை.

ஆனால் முற்கூறிய நாகரிகமும் பிரகிருதி சாஸ்திர உணர்ச்சியும் சிறிது கவலைக்கிடந் தருவனவாகவே உள்ளன. இவற்றால் நமது சமயமும் நாகரிகமும் கேடெய்தி விடுமோ என்ற அச்சமும் நமக்கு உண்டாகின்றது. இத்தனை கவலைக்கு இடமாயிருக்கிறது நமது சமயம் என்பதுதான் அதன் தற்கால நிலை.

இங்ஙனமாயின் பிரகிருதி சாஸ்திரம் போதிக்கத் தகாதென நாம் ஏன் பிரசாரஞ் செய்யக்கூடாதென நம் சகோதரிகளிற் சிலர் வினவலாம். வெகுகாலமாக நீரோட்டமென்பது அற்று ஆங்காங்கே குட்டமாகவும் மடுவாகவும், நீர் தேங்கித்தேங்கிக் கட்டுக்கிடையாய் நின்று அவ்வப்போது வந்துசேரும் குப்பைகூளங்களால் மலினப்பட்டு அழுகிநாறும் ஆற்றுப்படுகரிலே திடீரென மழை இடைவிடாமற் பெய்து யுகாந்தமென்னும்படியாகப் பிரவாகமெடுத்து அழுக்கு நிரம்பிய மடுக்களை யெல்லாம் தூயநீரால் நிரப்பி விடுவதுபோன்றதாகும் பிரகிருதி சாஸ்திர வுணர்ச்சியானது. அதனை நம் முழுமனதோடும் நாம் விரும்பியேற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவேயுள்ளோம். நமது மக்களும் நமது தேசமும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் இந்தச் சாஸ்திர ஞானத்தை நாமும் நிரம்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் நமது நாகரிகமும் நமது புராதனக் கல்வியும் மதமும் கேடு எய்துவதோடு அமையாது, அடியோடு அழிந்துவிடும் நிலைக்கு வந்துவிடுமென்றுகூடச் சொல்லலாம். இவ்வழிவும் சாமானிய

மாயிராது. நம்மவர்களாலேயே இகழப்பட்டு அதனைத் தாங்கி நிறுவுதற்கு தமிழ் மக்களுள் ஒருவரேனுமின்றி முடிவெய்தும்.

இதனை நாம் நன்றாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். தமிழ் நாட்டுச் சரித்திரத்திலே இது போன்றதொரு உபாதி பூர்வத்தில் எப்பொழுதும் நிகழ்ந்ததே இல்லை. நம் அறிவே இதனால் வஞ்சிக்கப்படுதலாலும், வேறுபாடு சிறிதுந்தோன்றா வண்ணம் சிறுகச் சிறுக நமது உள்ளத்தியல்பும் உலக வாழ்வும் மாறிக்கொண்டு வருதலாலும், இவ்வுபாதியின் உண்மையான முடிவு எளிதில் உணரக் கூடாததாயுள்ளது. ஆனால் அது பற்றி நாம் ஏமாந்து போகக்கூடாது. எதிர்கால முடிவை ஒருவாறாக அனுமானித்து இப்போதே வேண்டுவன செய்தல் நலம். தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,

> ‘வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்.’

என்று கூறியிருக்கின்றார். ‘வைத்தூறு’ என்பது வைக்கோற்போர். ஏதேனும் ஒரு தீங்கு வருவதற்கு முன்னாலே, அத்தீங்கினின்றும் தப்பித்துக் கொள்ளாதவனுடைய வாழ்வானது, பெரு நெருப்புக்கு முன் வைக்கோற்போர் அழிந்து விடுவதுபோல அழிந்து விடும் என்பது இதன் கருத்து. இவ்வுண்மை நமக்கு எப்பொழுதும் வழிகாட்டியா யிருக்க வேண்டும்.

மேற் குறித்த தீங்கு வாராமற் பாதுகாப்பது எப்படி? நமது சமயத்தின் பூர்வ சரித்திரத்தை நோக்குவோம். பிற சமயங்களால் நலிவு ஏற்பட்ட காலத்தே சமயாசாரியர்கள் தோன்றிச் சமயத்தை நிலைநிறுத்தினார்கள். அப்படி ஓர் அவதாரம் இப்போது நிகழ்ந்து விடுமென்று நாம் எதிர் பார்க்கவில்லை. யாரேனும் ஒரு புண்ணிய புருஷன் அப்படித் தோன்றினாலும் அவரை யுணர்ந்து போற்றக்கூடிய தகுதி நம்மிடத்தில் இல்லை. நமது வாழ்க்கை யுலகில் அவ்வகை அவதாரத்திற்கு வேண்டும் நிலைமையே இல்லை யென்று கூறவேண்டும். பின் யாது செயற் பாலது? எவ்வகையாக நமது சமயத்தைப் பாதுகாத்துப் போற்றுவது?



சமயமும் இயற்கைத் தத்துவ சாஸ்திரமும் உண்மையில் ஒன்றோடொன்று மாறுபட்டன வல்ல. இயற்கைத் தத்துவ சாஸ்திரங்களின் ஆராய்ச்சி குறிப்பிட்ட ஓரெல்லைக்குமேற் செல்ல மாட்டாது. அவ்வெல்லை

**நமது கடமை**

யைக் கடந்து நிற்கும் மூலதத்துவங்களைக் குறித்து இயற்கைத் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சி நிகழ்வதில்லை. இந்த மூலதத்துவப் பிரதேசமே சமயஆராய்ச்சி சஞ்சரிக்கும் இடமாகும். ஆனால் இயற்கைத் தத்துவ சாஸ்திரங்களுக்கும் சமய சாஸ்திரங்களுக்கும் சம்பந்தமே கிடையாது என்று நினைத்தல் தவறு. இயற்கைத் தத்துவ சாஸ்திரங்களால் ஆராய்ந்து காணப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டே சமய சாஸ்திரங்களின் ஆராய்ச்சி செல்லுதல் வேண்டும். இந்நெறியிற் சென்றாலன்றி அறிவாளர்களுக்கு அவை பயன்படமாட்டா. கோயிலொன்று எடுக்க வேண்டுமாயின், அதற்கு அடிப்படையாக அஸ்திவார மொன்று அமைத்துக் கொள்ளுதல் வேண்டுமல்லவா? இந்த அஸ்திவாரம் எவ்வளவு வன்மையுடையதாயிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவுதானே கட்டடமும் உயர்ந்து சென்று வலிமையுடையதா யிருக்கும்? அது போன்றே இயற்கைத் தத்துவ சாஸ்திர உண்மைகளுக்கு (Scientific Truths) மாறுபடாது, அவற்றோடு பொருந்தவே சமய ஆராய்ச்சிகளும் நடைபெறுதல் வேண்டும்.

இங்ஙனம் சமய ஆராய்ச்சி நடைபெறுதல் வேண்டும் என்றதன் கருத்து யாது? நமது முன்னோர்கள் கண்டுகொள்ளாத புதுவுண்மைகளை இவ்வாராய்ச்சியாற் காணமுடியுமென்பது கருத்தாகுமா? அன்று. வேறு யாதென்றால், நாம் சமயத்தை நோக்கும் முறையானது (Angle of vision) முற்றிலும் மாறுபட வேண்டும் என்பதே. இம்முறைக்கேற்ப நமது சமய சாஸ்திர உண்மைகள் ஆராய்ச்சியால் புதிதாக விளக்கப்படுதல் வேண்டும். இயற்கைத் தத்துவசாஸ்திர உணர்ச்சியிலும் அதன் விசாரணைமார்க்கத்திலும் வல்லவர்கள் நமது சாஸ்திரங்களை முறைப்படி ஆராய்தல் வேண்டும். அப்படி ஆராய்ந்து எளிய தெள்ளிய வசனங்களில் நமது சமயசாஸ்

182162

திர உண்மைகளை எழுதிப் பிரசுரஞ் செய்தல் வேண்டும். நாம் போலி ஆராய்ச்சிகளைப் போற்றித் திரிதல் கூடாது. நமக்கு இயல்பாகவுள்ள சமயாபிமானம், தேசாபிமானம் இவற்றைத் திருப்தி செய்யவெண்ணி, நம் நாட்டினரும் பிற நாட்டினரும் ஒரு சில நூல்களை எழுதி வருகின்றனர். அத்தகைய நூல்களால் நமது அறியாமை வளருமேயன்றி அறிவு அபிவிருத்தியாகாது.

மேற் கூறியவாறு செய்தலால் நமது சமயப்பற்று அழிந்துவிடுமென்று நாம் நினைத்தால் அதைக்காட்டிலும் பெருந்தவறு வேறொன்று இல்லையென்றே கூறுவேன். அத்துணை எளிதிலே, தொட்டவுடன் தகர்ந்து விழக்கூடியதன்று நமது சமயம். அதன் அஸ்திவாரம் மக்களது இதய தத்துவத்தின் அடிகாறுஞ் சென்று பரவியுள்ளது. அதனைப் போற்றி வளர்த்த சமயாசாரியர்களும் சாஸ்திர ஞானிகளும் பேரறிவு வாய்ந்தவர்கள். நமது தமிழ் மக்களும் இயற்கையிலேயே சமயப்பற்று மிக்கவர்கள். ஆதலால் இவ்வகையான ஓர் அச்சத்திற்கு ஆஸ்பதமேயில்லை. இதற்கு நேர்மாறாக, இயற்கைத் தத்துவ உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு சமயதத்துவங்களை ஆராய்வது மிகப்பயனுடையதாய் நம்மவர்களுக்குச் சமயத்தின்மீதுள்ள பற்றினை வளர்த்து, அதனை என்றும் அசைக்கவொண்ணாத நன்னிலையில் நிறுத்துமென்பது ஒருதலை.

“ முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே ”

என்று இறைவனே அவனருள் கைவந்த பெரியோர்களால் கூறப்படுகின்றான். இங்ஙனமாயின், அவனது இயல்புணர்ந்து அவனை யடைதற்குரிய நெறியைச் செப்பஞ் செய்து புதுமையாக்குவது அவனுக்கு உகந்ததாய்த் தானே இருக்க வேண்டும்?

இவ்வரிய தொண்டினை மேற்கொள்ளுதற்கு நமது சைவ சித்தாந்த மகா சமாஜம் மிக்க தகுதியுடையதென்பது எனது



கருத்து. இதற்கேற்ற முயற்சிகளைச் செய்யும்படி இந்த மகா சமாஜத்தின் அங்கத்தினர்களின் உள்ளங்களை இறைவன் தூண்டியருளுதல் வேண்டுமென்பது நாம் அனைவரும் முதலாவது செய்துகொள்ளும் பிரார்த்தனையாகும்.

இம் மங்கையர் மகாநாட்டில் நாம் செயற்பாலது யாது? மேற்கூறிய ஆராய்ச்சித் துறைகளிலே நம்மவர் மனம் பதியும்படியான முயற்சியை நாமும் மேற்கொள்ளுதல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் முற்காலத்தில் நிகழ்ந்த ஓர் அரிய செய்தி பெண்பாலாராகிய நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை ஊட்டத்தக்கது.

பாண்டிய நாட்டிலே நெடுமாற நாயனார் அரசுபுரிந்து கொண்டிருந்த காலத்திலே சைவசமயம் மிகவும் க்ஷீணதசையுற்றது. சமணசமயம் தழைத்தோங்கலாயிற்று. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நிகழ்ந்துவந்த சமயக்கல்வியும் ஆசாரமும் சமுதாய வாழ்க்கையும் நெறிதடுமாறலாயின. குடிகளுக்குத் தாயாகியும் அரசனுக்குப் பெருந்துணைவியாகியும் விளங்கிய மங்கையர்க்கரசியார் என்னும் பெருந்தேவியார் நமது சமுதாயத்தின் நன்மையையும் சைவ சமயத்தின் நன்மையையுங் கருதித் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைத் தமது நாட்டிற்கு வரவழைத்துச் சமணர்களை வாதில் வெல்வித்து, அரசனைத் தீ நெறியினின்றும் உய்வித்துத் தமிழ்நாட்டிற்குப் புத்துயிர் அளித்தனர். மங்கையர்க்கரசி என்ற பெயர் இவருக்குக் காரணப் பெயராகவே அமைந்துவிட்டது. அவரை நமது இனத்தைச் சார்ந்தவரென்று சொல்லிக்கொள்வதில் நமக்கு மட்டிலடங்காத கர்வம் அடைகின்றோம். அம்மரபிலே தோன்றிய நாமும் சைவ சமயம் ஓங்குதற்பொருட்டு முயற்சிசெய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

## பெண் சமுதாயம்

இக்கடமையை மேற்கொள்ளவேண்டுமாயின் அது நம் பெண்பாலாரது அறிவு வன்மைகொண்டே இயலுவதொன்றாம். அறிவு வன்மை எப்படி ஏற்படும்? அது ‘சுதந்திரம்’

என்னும் விளைநிலத்திலன்றி வேறிடங்களில் உற்பத்தியாக மாட்டாது. அறிவு மேன்மேலும் அபிவிருத்தியாதலில் எவ்வகையான தடையும் இருத்தல் கூடாது. நமக்கோ உரிமையென்பதே யில்லையாயின், சுதந்திர வுணர்ச்சி எவ்வாறு உண்டாகும்? இப்போது சில காலமாகப் பெண்களது உரிமையை நமது சகோதரர்கள் பேணிவருகிறார்களென்பது உண்மை. நம்மவரில் ஒருசிலரும் தம் சகோதரிகளுடைய உரிமைகளின் பொருட்டு அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பதும் நாம் மகிழ்ச்சியுடன் எடுத்துக்கூறத்தக்கதே. எனினும், இம்முயற்சி போதிய அளவு உளதென்று நினைக்க முடியவில்லை. அன்றியும் இதற்கு மூன்று வகையான இடையூறுகள் எதிரிட்டு நிற்கின்றன.

**முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் இடையூறுகள்**

முதலாவது : நாம் பேதையர்களாய்க் கௌரவமற்ற வாழ்க்கையில் வெகு காலமாக உரங்கொண்டு வந்திருக்கிறோம். இதனால் நமக்கு நாமே பகையாயிருக்கிறோம்.

இரண்டாவது : பெண்பாலார் ஆண்பாலாரது உடைமை என்ற உணர்ச்சி, ஆண்பாலாராகிய நமது சகோதரர்களுக்கு மிகப் பூர்விக காலந்தொட்டுப் பரம்பரையாய் வருவதொன்றாம். 'மங்கையர் என்றுஞ் சுதந்திரபங்கர்' என்ற கோட்பாடு இவ்வுணர்ச்சிபற்றி யெழுந்ததே. இதனை நம்பெண்ணினத்தவரும் ஒருவாறு ஆமோதித்தே வந்திருக்கிறார்கள். இப்போதும் அதனை நாம் ஆமோதித்து வருகிறோம். இவ்வுணர்ச்சி அறவே நீங்குதற்குரிய காலம் அடுத்து விட்டதென்று கூறமுடியாது. ஐரோப்பிய நாடுகளில் முதற்கொண்டு இவ்வுணர்ச்சி சமீப காலத்திலே தான் மறையலாயிற்று. இப்போதுதான் சமத்துவ வுணர்ச்சி அங்கே பரவி வேரூன்றி யுள்ளது. நமக்கு அத்துணைத் தீவிரமான பக்குவம் இருப்பதாகவும் தெரியவில்லை; அத்துணை அவசரமாகவும் சமத்துவ வுணர்ச்சி நிரம்பி அனுஷ்டானத்துக்கு வருதல் கூடாது. ஏனெனின் அவ்வுணர்ச்சியானது சமுதாயக் கேட்டிற்கு இடமில்லாதபடி மெல்லப் பரவுவது தான் நலமாகும். ஆனால் அது பரவ வேண்டுமென்பது அவசியம். பரவச் செய்வதும் எளிதில்



முடிக்கக்கூடிய காரியமன்று. ஏனெனின் 'சுதந்தரபங்கவுணர்ச்சி' காரணத்தை யொட்டி நிகழ்வதன்று. காரணம் யாதும் வேண்டாது உள்ளத்துணர்வினால் மட்டுமே இது நிகழுவதாகும். இதனைத் திருத்துதற்கு மிக நீண்ட காலம் வேண்டியதா யிருக்கலாம்.

மூன்றாவது இடையூறாகக் கூறவேண்டியது யாதெனின், நமது சகோதரர்கள் அனுஷ்டான மூலமாயும் மறைவாயும் பகிரங்கமாயும் செய்து வரும் எதிர்ப்பிரசாரமாகும். இதனை விரித்துக் கூறவேண்டிய அவசியமிருப்பதாகத் தோன்றவில்லை. நம் சகோதரிகளிற் பலரும் இவ் எதிர்ப்பிரசாரத்தில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இம் மூவகை இடையூறுகளும் தமிழ் மக்களது வாழ்க்கைச் சரிதத்தில் எல்லாக் காலத்தும் ஒருநிலையாகவே நின்று சமுதாய முன்னேற்றத்தைத் தடைசெய்து வந்ததாகக் கூற முடியாது. நமது சமயக்கொள்கைகளிலும் கடவுளர்கள் சரிதங்களிலும் பெண்மை மிக்க கௌரவமுடையதாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது.

உலகில் புல் பூண்டு முதல் மக்கள் ஈறாக எப்பொருளைப் பார்த்தாலும் ஆண் பெண் தன்மையாகவே இயைந்து தோன்றுகிறது. எல்லாம் வல்ல சிவமும் தம் உடலில் பாதி

**பெண்மையின் கௌரவம்**

பெண்ணுரு வமைந்தே தோன்றுகிறார். அவரை வழிபடுவோரும் அம்மூர்த்தத்தை அம்மை அப்பராகவே வழிபடுகின்றனர். இவ்வாறு கடவுள் ஆண் பெண் வடிவாக இருப்பதின் நோக்கம் என்னையென்று உற்று நோக்குவோமாயின், அவ்வடிவம் இச்சராசரங்களனைத்தும் ஆண் பெண் வடிவாயிருத்தலை அறிவுறுத்தும். மேலும் இந்தத் துவந்துவரூபம் எப்பெயரால் அழைக்கப்படுகின்றதென்று பார்ப்போமாயின், அது சக்தி, சிவம் என்பதே ஆகும். சக்தியாவது சிவத்தின் அருளாகும். அவ்வருளைச் சிவத்திடமிருந்து பிரிக்க இயலாது. ஆகையால் இரண்டும் உயர்வு தாழ்வின்றி ஒத்து உலகை நடத்துகிறது. அவ்வாறு உயர்வு தாழ்வில்லை என்றாலும்

சிற்சில அவசரங்களில் சிவத்தைவிட சக்திக்குப் பெருமை அதிகமாக விளங்குகிறது. அச்சக்தியின் அம்சமே பெண் மக்களாவர் என்று கூறுவதில் ஒருவரும் ஐயப்பாடு கொள்ளார். செல்வம் வேண்டுமானால் அதற்கு அதிபதியானவள் இலக்ஷ்மியே ஆவள். கல்விக்குத் தெய்வம் கலைமகள். வீரத்திற்குத் தெய்வம் வீரலக்ஷ்மி. இப்பெண் தெய்வங்கள் இல்லாத நாடு என்னும் ?

பெண்களுட் சிறந்தாளொருத்தியின் பெருமையால், இப்பெண் தெய்வங்கள் அடைந்துள்ள மேன்மையைக் கம்பரது தெய்வ வாக்கினால் உணரலாகும்.

‘ சோகத்தா ளாய நங்கை கற்பினாற் றொழுதற் கொத்த
மாகத்தார் தேவிமாரும் வான்சிறப் புற்றார் மற்றைப்
பாகத்தா ளிப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தா ளல்லள் மாய னுயிர மௌலி மேலாள்.’

பண்டைக் காலத்தில் நம் நாட்டுப் பெண்மணிகளின் சரிதங்களை நோக்கினாலும், அக்காலத்தே பெண்மை கௌரவிக்கப்பட்ட தென்பது விளங்கும். முற்காலத்திலே நம்மவர்கள் பல துறைகளிலும் மேன்மை யுற்றிருந்தார்களென்பது புராதன நூற்களில் பல இடங்களிலும் கூறப்படுகின்றது. இடைக் காலத்திலும் அவ்வாறே பெண்மக்கள் புகழுடன் விளங்கியுள்ளார்கள். மணிமேகலை, திலகவதியார் முதலான துறவிகளும், கண்ணகிமுதலிய கற்பரசிகளுமிருந்து பெருமையடைந்தது நமது நாட்டிலேதான். மங்கையர்க்கரசி வரலாற்றால் பெண்கள் எவ்வளவு உரிமை யுடையவர்களாக இருந்தார்களென்று அறியலாம். அரசன் அமண் மதத்தில் ஈடுபட்டிருந்தும் அரசியார் தம் கொள்கையை மாற்றாது சைவ நெறியிலேயே நின்று அந்நெறி தழைப்பதற்குப் பெரிதும் முயன்று இறுதியில் வெற்றியடைந்தனர். அரசனும் அரசியைத் தன்வழி நடக்கச் சிறிதும் முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. அரசியாரைச் சிறிதும் துன்புறுத்தியதாகவும் நாம் கேள்விப்படவில்லை. இதற்கு மாறாக அவரவர் கொள்கையின்படி நடப்பதே உத்தமம் என்று அரசியாருக்கு அரசன் சுய அதிகாரமும் அளித்திருந்தானென்று கருத இடமுள்ளதாகின்றது.



சங்ககாலத்திலே பெண்புலவர்கள் பலர் விளங்கினார்களென அறிகின்றோம். இவர்களது சரிதங்களை யெல்லாந் தொகுத்து ‘நல்லிசைப்புலமை மெல்லியலார்கள்’ என்ற நூலும் வெளிவந்துள்ளமை பலரும் அறிவர்.

**பெண்களின் கல்விப் பெருமை**

ஔவை பாரி மகளிர் முதலானோரது சரிதங்களைப் படிக்குந்தோறும் எல்லையில்லாத பெருமகிழ்ச்சி யடைகின்றோம். வள்ளுவர் காலத்தில் ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் படித்து வந்தார்களென்பது அவரது நூலால் அறியலாம்.

‘ விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.’

என்ற குறளைக் கவனிக்க. இங்கே ஆசிரியர் வள்ளுவனார் ஆண் மக்களும் பெண் மக்களும் உளப்பட ‘மக்கள்’ என்று பொதுவாகவே கூறினர். புறநானூறு என்னும் மிகப்புராதனமான தொகைநூலிலே, பிசிராந்தையார் என்னும் புலவர் தாம் மூப்படைந்தும் நரைதிரை முதலியனவின்றிச் சரீரப் பொலிவோடு இருப்பதற்குக் காரணம் இன்னதென்று கூறுமிடத்து,

‘மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்.’

என்று நயம்பெற விளக்குகின்றனர். இவ்வடிக்கு உரைகாரர் ‘ மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினர் ’ என்று பொருள் எழுதினர். இதனால் பண்டைக் காலத்தில் பெண்கள் கற்று அறிவுடையராயிருந்தமை பெரிதும் போற்றப்பட்டதெனல் வெளிப்படை.

**பெண்களின் வீரத் தாய்மை**

அன்றியும் மெல்லியர் என்றும் அபலைகள் என்றும் (Weaker sex) என்றும் ஒதுக்கப்படுகின்ற நம் இனத்தவர் முற்காலத்தே வீரத் தாயராகவும் விளங்கி இருந்தனர்.

'நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிப்
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.' (புறம் - 278.)

போர் பலநாள் நிகழ்ந்தது. அதிலே பொருதற்குச் சென்ற தனது மகன் யாதாயினனோவென்ற கவலை ஒரு பெண்ணரசியை வாட்டிற்று. இக்கவலையால் அவளது அழகிய மேனி நரம்பு புறந்தோன்றும்படி வற்றியது. வேயெனத் திரண்ட தோள் மெலிந்தது. இடைப் பிரதேசமெல்லாம் ஒட்டி யுணங்கிப் போயிற்று. நடுப் பருவத்தளாயிருந்தும் முதுமை யெய்தியவள் போன்று ஆயினாள். இவ்வாறு கவலை தேங்கிய முகத்தொடு வருந்தி யிருந்தபொழுது ஒரு கொடிய சொல்லைக் கேட்டாள்: தன் மகன் படைக்குத் தோற்றோடினன் என்று. இங்ஙனம் ஒருவர் இருவர் கூறினால் அது பொய்யாகவே இருத்தல் வேண்டுமென்று ஒதுக்கி விடுவாள்; பலரும் கூறினார்கள். கோபங் கொள்ளுவதற்குச் சிறிதும் இயலாதிருந்த அவளது கண்களில் சினத் தீயானது கொழுந்து விட்டெரிந்தது. 'இச்செய்தி ஒருபொழுதும் உண்மையாகாது; உண்மையாய் இருக்குமாயின், மகனென்று எனது மடிமீதேறி எனது ஸ்தன்னியங்களில் வாய் வைத்துப் பால் குடித்து விட்டான். அவை மலினப்பட்டு விட்டன; அவைகளை அறுத்தெறிவே'னென்று சபதங் கூறிப் போர்க்களத்திற் சென்று செய்தி அறியலானாள். அங்கே யாது கண்டாள்? போர்க்களமெல்லாம் பிணக் குவையாகவும் இரத்த மயமாகவும் இருந்தது. பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டே சென்றாள்.

(தொடரும்)

சைவ இளைஞர் மகாநாட்டுத்

# தலைமை உரை

[திரு. கீ. இராமலிங்கம்]

## I முன்னுரை

**இளஞ்சைவச் செல்வர்களே! சைவப்பெருந் தலைவர்களே!**

இம்மகாநாடு மிகப் பெரியதொன்று. அளவில் மாத்திரமல்ல; இதைக்காட்டிலும் அளவில் பெரிய மகாநாடுகள் எத்தனையோ நடக்கின்றன. என்றாலும், இளைஞர் கூடி நடத்துகின்ற கழகத்தின் பெருமை வேறு எந்தக் கூட்டத்திற்கு உண்டு? இளைஞர்கள் கூட்டம் என்பதனாலே உண்டாகும் பெருமைமாத்திர மல்லாமல், இக்கழகத்தினுக்கு வேறு பெருமையும் உண்டல்லவா? சைவ இளைஞர் பெருங்கழகமாயிற்றே இது. இங்குச் சைவமென்னும் துலங்கு கண்ணாடியின் வழியாகவன்றோ பொருள்கள் ஆராயப்பெறப் போகின்றன. ஒப்பற்றதாய சைவ சமயத்தின் செல்வர்களாம் இளைஞர்கள் மகாநாடென்றால், மகத்தானது என்று சொல்லவும் வேண்டுமோ? நாளை உலகாளும் நம்பிகளாய நல் இளைஞர் கலந்து செய்யும் முடிவுகள் நாளையுலகத்திற்கு நன்மை செய்து, செம்மை கூட்டுவதுபோல, மற்றோர் மகாநாட்டுத் தீர்மானங்கள், மண்டிய பயன் தந்து, மன்னுலகை யாள வல்லனவா?

இவ்வளவு சிறந்ததொரு மகாநாட்டிற்குச் சாலச்சிறந்ததொரு இளைஞரைத் தலைவராகத் தேர்ந்திருத்தல், நயன் செறித்துப் பயன் பெருக்கியிருக்கும். ஆனால், உலகிலே அன்பென்றும், அதிர்ஷ்டம் என்றும் இரண்டு பொருள்கள் உண்

டென்பதை அறிவீர்கள். இவையிரண்டும் உலகில் உள்ளவரை 'தக்கார்க்கே தக்கவை கிடைக்கின்றன, தகுதியில்லார் தகைமை சான்ற நிலைகளைப் பெறமாட்டார்கள்' என்று துணிந்து கூற முடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

ஆகவே, எந்த வகையிலும் அந்தமில்லாத அடியேன், இந்த மாபெருங் கழகத்திற்குத் தலைவனாக வந்து உட்கார்ந்து கொண்டது, உங்களுக்குப் புதுமையாகத் தோன்றாது. சைவ சித்தாந்த மகா சமாஜத்தினைப் புரந்தருளும் பெருந்தகையார்களின் அன்பின் அளவிறந்த தன்மையினையும், அடியேனது அதிர்ஷ்டத்தின் அந்தகப் பெற்றியினையும் நீங்களே அளந்தறிந்து, அம்ம ! என்று அதிசயிப்பீர்கள்.

இம்மகாநாடு, சைவப் பெரியார் மகாநாட்டிற்கும் சைவ மங்கையர் மகாநாட்டிற்கும் இடையில் நடப்பதில் கருதத்தக்கதொரு பொருள் தோன்றுகின்றது. அப்பன் ஒரு புறம் வீற்றிருப்பவும், அம்மை ஒருபால் அமர்ந்திருப்பவும் இடையில் நடப்பார் யாவர்? இளைஞர்களேயன்றோ? சிவ பரம்பொருள் ஒரு பக்கமும், எம்பெருமாட்டி மற்றொருபக்கமுமாக, ஓரே ஆசனத்தில் எழுந்தருளும்போது இடையில் தோன்றுபவர் யாவர்? இளைஞராம் எந்தை முருகப்பெருமானாரன்றோ? சோமாஸ்கந்த மூர்த்தத்தை அறியாத சைவரும் உண்டோ? அன்னை தந்தையருக்கு இடையே இளஞ்சிறுவர் கூடிக் குலவுவது இயற்கைதானே? இம்மகாநாடு, இயற்கைக்கு எவ்வளவு பொருத்தமாக, சைவத்திற்கு எவ்வளவு சம்பந்தமாக, அமைந்திருக்கின்றது பாருங்கள் !

## II இளைஞர் இயக்கத்தின் இன்றியமையாமை

### (i) இளமையின் பெருமை

மக்கள் தொகுதி தக்கவாறு முன்னேற வேண்டுமானாலும், கடவுள் கொள்கைத் திடமுடன் திகழ்தர வேண்டுமானாலும், நாடு மாடெல்லாம் பெற்று மகிழவேண்டுமானாலும்,



ஞாலம் நலமுற வேண்டுமானாலும், எவ்வகை அமைப்போ, முயற்சியோ, இயக்கமோ, செவ்வையாய் நடைபெற வேண்டுமானாலும், இளைஞர் துணையே இன்றியமையாது இருந்தாதல் வேண்டும். எண்ணியதை எண்ணியவாறு முடிக்கும் ஆற்றல் இளமைக்கே உண்டு.

இளமைப் பருவமே வாழ்க்கையிலே சிறந்த பருவமாகும். இளைஞரது உள்ளம் அழுக்குப் படியாத தூய்மையான திரையைப் போன்றிருக்கிறது. அதன்மீது ஓவியம் வல்லான் எவ்வித சித்திரத்தையும் இடரின்றி எளிதாக எழுதி முடிக்க முடியும். எழுதிய உருவங்களும் செம்மையாகவும் திண்ணமாகவும் சீலையில் பற்றிக்கொள்ளும். அத்தகைய மாசற்ற மனது, பால்பற்றி எண்ணாது, பேசாது, செய்யாது; பரந்த நோக்கத்துடனேயே எப்பொருளையும் காணும். இளைஞராயிருந்தபோது ஒருவருக்கு இருந்த அகன்ற கருத்துக்களும், செயல்களும் அவர் முதியவராக ஆகக், குறுகிக் கொண்டே வருவதை நாம் கண்கூடாகப் பலபடப் பார்த்திருக்கிறோம்.

இளமையிலே இயற்கையாக ஊற்றெடுக்கும் இப் பரந்த நோக்கத்தினையும், திண்மையையும், தெளிந்த அறிவினையும் இளமைப் பருவத்திலேயே உறுதி செய்து வைத்துக்கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் நாள் ஏற, நாள் ஏற, அவை முறையே குறுகியும், மெலிந்தும், மங்கியும் போய்விடும். இவ்வருமைப் பண்புகளை உறுதிசெய்து ஊக்கமூட்டுவதே இது போன்ற கழகங்களின் கடமையாகும்.

இங்கு இளைஞர் என்றது ஆண் பெண் இருபாலாரையும் குறிக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. ஆண் இளைஞரைக்காட்டினும், பெண் இளைஞர்களே எடுத்த எந்தச் செயலையும் சாதித்துவிட வல்லவர்கள் என்னும் உண்மையை எல்லோரும் அறிவீர்கள். இளமையிலே ஆண் இளமை பெண் இளமை என்ற வேறுபாடு இல்லாவிட்டாலும், பெண் இளைஞருக்கு இயல்பாயுள்ள உள்ள உறுதியை யாவரும் ஒத்துக்கொள்ள வேண்டியதுதானே.

நமது சைவத் தமிழ்நாடு, இப்போதுள்ள உறக்க நிலையை உதறிவிட்டு, உயர்ந்தநிலை அடைவதற்குப் பெருந்துணையாயிருக்க வேண்டியவர்கள் பெண் இளைஞர்களே யாவர். அவர்களது பக்கத்துணை யில்லாமல் ஆண் இளைஞர்கள் என்னதான் முயன்றாலும் முழுப்பயன் எய்த இயலாது போகும் என்பது உங்கள் ஒவ்வொருவருக்கும் இனிது தெரியும்.

## (ii) அயல்நாடுகளில் இளைஞர் இயக்கம்

இளமையின் பெருமையை அறிந்தவர்களாய, அயல் நாட்டவர் பலரும் ஒவ்வொரு துறையிலும் இளைஞரைத் தொழிற்படுத்துவதை நாம் அறிகிறோம். ஆண் இளைஞர் கிறித்துவச் சங்கம் (Y. M. C. A), பெண் இளைஞர் கிறித்துவச் சங்கம் (Y. W. C. A.) என்னும் அமைப்புகள், உலகமெங்கணும் கிளைகள் பெற்று நிலவுவதை யாவரும் அறிவர். சாரணர்கள் (Boy scouts and Girl guids) என்ற பெயரால் ஆண் பெண் இளைஞர்களைத் தனித்தனிக் கூட்டித் தொண்டாற்றச் செய்யும் வழக்கம் மேல்நாட்டவரதுதானே?

## (iii) நம் நாட்டில் இவ்வியக்கம்

நமது நாட்டிலும், அரசியல் மகாநாடுகள், சமூக வளர்ச்சிக் கூட்டங்கள், மொழி வளம்பெறுத்தும் கழகங்கள், இன்னவை போன்ற பிறவற்றினும் இவ்விளைஞர் இயக்கம் தொழிற்படுவதை நாம் பார்க்கிறோம். சட்டசபைத் தேர்தல்களிலுங்கூட இளைஞரது துணையை எவ்வளவு தூரம், தேர்தலுக்கு நின்றவர்கள் நாடுகிறார்கள் என்பதும், இளைஞர் பலம் எப்பக்கமிருக்கின்றதோ, அப்பக்கமே வெற்றிவருவது நிச்சயம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். சமயத் துறையிலும், நமது சைவ சமயத்துறையிலும், இவ்விளைஞர் இயக்கம் இன்றியமையாதது; சைவத் தமிழ்மக்கள், சைவத் திருநாடு முன்னேற வேண்டுமாயின் சைவ இளைஞர்கள் கண்விழிக்கவேண்டும். சைவ இளமக்கள் இழுத்துக் கட்டிக்கொண்டு உழைக்க முந்துதல்வேண்டும் என்னும் பொருளினையுணர்ந்து, சைவர் மகாநாட்டை யொட்டி இச் சைவஇளைஞர்



மகாநாட்டை நடத்த ஏற்பாடுசெய்த சைவ சமாஜத்தினரது செயல் மிக்க அருமையானதொன்றாகும்.

## (iv) நம் சமயத்தில் இளமைக் கருத்து

அண்ட சராசரங்களையும் ஆள்பவன் ஒரே இறைவன்; பல கடவுளர் இல்லை. தெய்வம், தோற்றம் இளமை மூப்பு மறைவு முதலிய கால நிலைகளை யற்றது என்னும் செவ்விய கொள்கையுடையது நம் சைவம். இன்றும் அக்கொள்கை மாறாது அப்படியே இருக்கிறது. இருந்தும் என்றும் இளைஞராகிய முருகனையும், விநாயகரையும் கடவுளாகச் சமயத்தில் அமைத்துக்கொண்டதின் கருத்து என்னை? பல கடவுளர் கொள்கை சைவத்தில் புகுந்துவிட்டது என்று சொல்லலாமா? இருப்பது ஒரே கடவுள்தான். அவருக்குப் பல நாமங்களையும் பல ரூபங்களையும் நாம் கற்பித்து வழிபடுகிறோம் என்பதுதானே உண்மை. அப்படிப் பல பெயர்களையும் உருவங்களையும் உண்டாக்கிக்கொள்வதிலே இளமையைக் குறிக்கும் சொல்லாகிய 'முருகன்' என்ற பெயரையும், அப்பெயருக்கு ஏற்ப, என்றும் இளமை மாறாத திருவுருவத்தையுமே யன்றோ நாம் அமைத்துக்கொண் டிருக்கிறோம். இளமைக்கு என்ன சிறப்பு பாருங்கள்!

சிவபெருமானுக்கே இளைஞன் முருகனே பிரணவ உபதேசம் செய்தார். சிவபெருமானிடம் வரம்பெற்று உரம் பெருகி அட்டூழியங்களை அளவிலாது செய்துவந்த மூன்று அசுரர்களை அழிக்கச் சிவபெருமானால் முடிந்ததா? இளைய முருகனன்றோ அழித்தருளி ஆண்டவனானான். முப்புரங்களை எரிக்கச்சென்ற காலத்தும், பிள்ளையாரது துணையை நாடாது புறப்பட்டதனால், சிவனார், தேர் அச்சிறுந்து பட்டபாடு சைவர்கள் அறியாததா? இறைவனும் இளமையின் பெருமையை நமக்கு உணர்த்தவே இளைய திருமேனிகள் தாங்கித் திருவிளையாடல் செய்தனர்போலும்!

(தொடரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

“ எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு”

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
# 29-ம் ஆண்டு அறிக்கை

## சமாஜம் நிறுவப்பெற்ற காலம்

இச்சமாஜம் சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் எல்லோருக்கும் எளிதில் விளக்கும் பொருட்டு 1905௵ ஜூலை மீ 7உ நிறுவப்பெற்றது. பிறகு 1915௵த்தில் சென்னை அரசாங்கத்தாரால் 1860௵த்திய சட்டப்படி 1915-16௵த்திய S. நெ. 6. சபையாகப் பதிவு செய்யப்பட்டது.

## சமாஜக் காரியாலயம்

இது தற்போது சென்னைத் திருமயிலாப்பூர் கல்லுக்காரத் தெரு, 22-வ. நெ. “திருவருளகம்” என்னும் இல்லத்திலுள்ளது.

## உறுப்பினர் தொகுதி

இவ்வாண்டின் தொடக்கத்தில் சமாஜ உறுப்பினர் தொகுதி 410 ஆகவும், இறுதியில் 424 ஆகவும் இருக்கிறது.



உறுப்பினர் தொகுதியைப் பெருக்குவது சமாஜப் பணியாளர் முதற் கடமையாகும்.

## இணைக்கப்பெற்ற சைவ சபைகள்

இவ்வாண்டில் கீழே குறிக்கப்பட்டுள்ள பதினைந்து சைவ சபைகள் நமது சமாஜத்தோடு இணைக்கப் பெற்றுள்ளன :—

1. தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம், திருநெல்வேலி
2. சைவ சித்தாந்த சபை, தஞ்சாவூர்
3. ஷை திரிசிராப்பள்ளி
4. ஷை தூத்துக்குடி
5. ஷை ஸ்ரீவில்லிப்புத்தூர்
6. ஷை சமாஜம், மதுரை
7. ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபை, இராயப்பேட்டை
8. ஸ்ரீ இராமலிங்க அடிகள் திருவருள் கழகம், கண்டியூர்
9. சமரச வேத சன்மார்க்க சங்கம், பெங்களூர்
10. சென்னை வேதாகம மோக்த சைவ சித்தாந்த சபை, புரசபாக்கம்
11. ஸ்ரீகாரணீசுவரர் தமிழ் வேதபாராயண பக்தஜன சபை, சைதாப்பேட்டை
12. சைவசித்தாந்த இளைஞர் சங்கம், தஞ்சாவூர்
13. ஸ்ரீசதுர்த்தி விநாயக ஷண்முகாநந்த சபை, விநாயகபுரம், இராயப்பேட்டை
14. ஸ்ரீவாகீச பக்தஜன சபை, திருவோத்தூர்
15. திருநாவுக்கரசு சித்தாந்த சபை, களிமேடு, தஞ்சை ஜில்லா

இச்சபைகளின் ஆண்டு விழா முதலிய நிகழ்ச்சிகள் அவ்வப்போது ‘சித்தாந்தம்’ வாயிலாக வெளிவந்துள்ளன. இச்சபைகளைப்போலவே நமது நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான ஏனைய சைவ சபைகளும் நமது சமாஜத்தோடு ஒத்

துழைக்க முன்வந்தால் சமயத்தொண்டு மிகச் சிறப்பாக நடைபெறும்.

### காரிய நிர்வாகசபை

இச்சபையின் கூட்டங்கள் நான்கு இவ்வாண்டில் நடைபெற்றன.

### பொதுக்கூட்டங்கள்

இவ்வாண்டில் ஆண்டுவிழாவும், விசேட மகாநாடும், இருபத்தாறு பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. இவற்றுள் ஆண்டுவிழா தஞ்சையிலும், விசேடமகாநாடு மயிலாப்பூரிலும், சித்தியார் வெளியீட்டுக் கூட்டம் திருத்துறையூரிலும், பெரியபுராண வெளியீட்டுக் கூட்டம் குன்றத்தூரிலும், ஏனைய சென்னையிலும் நடைபெற்றன. இவைகளின் விவரங்கள் அவ்வப்போது 'சித்தாந்தம்' வாயிலாக வெளிவந்தன.

### புராணபடனம்

சமாஜம் இம்முறையைக் கைக்கொண்டு மயிலாப்பூரில் திரு. நாகி செட்டியாரவர்கள் ஆதரவில் வாரத்துக்கொரு அன்பர் இலவசமாக ஒரு சிவசரிதையைப் புராணப் பிரசங்கம் செய்யுமாறு ஏற்படுத்திப் பல வாரங்கள் நடத்திவந்தது. பின்பு ஒருவரே ஊதியங் கருதி ஒவ்வொரு வாரமும் சொல்வதென்று இம்முறை மாறுபடவே, சமாஜம் மெல்ல விலகிக் கொள்ள நேரிட்டது.

### சாத்திர வகுப்புக்கள்

திரு. அ. கந்தசாமிப் பிள்ளையவர்களால் 'திருவருட்பயன்' வகுப்பு நடைபெற்று 50 குறட்பாக்கள்வரை முடிந்தன. பிறகு ஆசிரியர் உடல் நலனின்மை முதலிய காரணங்களால் வகுப்பு நடைபெறவில்லை.



### திருமுறை வெளியீடு

இவ்வாண்டில் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் வெளிவந்தது. சிவஞானசித்தியார் மூலமும் உரையும் வெளியிடப்பட்டன. திருமுருகாற்றுப்படை இரண்டாம் பதிப்பு வெளிவந்தது.

### வரவு செலவுக் கணக்கு

இக்கணக்கைச் செம்மையாக வைத்துவந்த பொருட்காப்பாளருக்கும், மாதந்தோறும் பரிசோதித்த மாதக் கணித பரிசோதகருக்கும், ஆண்டுக் கணக்கைப் பரிசோதித்த ஆண்டுக் கணித பரிசோதகருக்கும் சமாஜம் நன்றி செலுத்துகின்றது. இவ்வாண்டின் வரவு செலவுக் கணக்குத் தொகுப்பேடு இவ்வறிக்கையின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

### நன்றி கூறல்

வெளியூர்களில் சமாஜக் கூட்டங்களை நடத்தி உதவி புரிந்த அன்பர்கட்கும், சமாஜக் கூட்டங்கட்குச் சென்னையில் இடந் தந்து வேறு பற்பல வழிகளிலும் சமாஜத்தோடு ஒத்துழைக்கும் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினர்க்கும், காரியதரிசி முதலிய சமாஜப் பணியாளர்கட்கும், சமாஜத்துக்குப் பல வழிகளில் தொண்டு புரியும் ஏனைய அன்பர்கட்கும் சமாஜம் நன்றி செலுத்துகிறது.

### சைவத் தேர்வுகள்

இவ்வாண்டில் சமாஜம் சைவத் தேர்வுப் பரீக்ஷை நடத்தி ஒருமாணவர் 'இளஞ் சைவப் புலவர்' என்ற பட்டம் பெறும் தகுதி யுடையாரென்று தீர்மானித்தது. இத்தேர்வுக்கு வினைத்தாள் உதவி விடைகளைச் சோதித்து உபகரித்த திருவாளர்கள் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, எஸ். வையாபுரி

பிள்ளை ஆகிய இரு பேரறிஞர்கட்கும், பரீக்ஷையைத் தஞ்சையில் நடத்தி உபகரித்த திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கட்கும் சமாஜம் நன்றியுடைத்து. அடுத்த ஆண்டில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தேர்வுக்கு வருவார்கள் என்று சமாஜம் எதிர்பார்க்கின்றது.

## வேண்டுகோள்

பன்னிரு திருமுறைகளும் சமாஜத்தின் அடக்க விலைப் பதிப்புக்களாக வெளிவந்து விட்டன. பதினான்கு சாத்திரம் மூலமும் உரையும் திருவதிகையில் இவ்வாண்டு நிறைவிழாவில் வெளிவரும். இந்நூலில் ஒன்பது சாத்திரங்களை மிகச் செம்மையாகப் பல ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கிச் செப்பஞ்செய்து உபகரித்துள்ள திரு. எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் நன்றி என்றும் மறக்கற்பாலதன்று. இனித் திருப்புகழ் முதலியன வெளிவரவேண்டும். இதற்குச் சைவச் செல்வர்களின் பொருளுதவியை சமாஜம் எதிர்பார்க்கின்றது. சமாஜத்துக்கு எல்லா வழிகளிலும் ஊக்கமும் பொருளும் அளித்து, சைவ நன்மக்கள் உதவிபுரிய இறைவன் திருவருள் துணை செய்வதாக.

இங்ஙனம்

உத்தரவின்படி

10-12-1934. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

**சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் இருபத்தோன்பதாம் ஆண்டு** (1-12-33 முதல் 30-11-34 வரை)

வரவு செலவுக் கணக்குத் தொகுப்பேடு

| வரவு | ரூ. | அ. | பை | செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| ஆயுள் சந்தா | 25 | 0 | 0 | சித்தாந்தம் காகிதம் அச்சுக்கூலி | 435 | 0 | 6 |
| சந்தா | 735 | 14 | 0 | வெளியீடுகள் | 1032 | 8 | 3 |
| இணைத்தல் சந்தா | 42 | 0 | 0 | கூட்டங்கள் | 68 | 12 | 0 |
| புத்தக விற்பனை | 719 | 6 | 3 | காந்தவிளக்கு | 15 | 0 | 0 |
| நன்கொடை | 1 | 0 | 0 | வேளாள பாங்கி | 349 | 1 | 3 |
| பிரவேசக்கட்டணம் | 5 | 0 | 0 | இந்தியன் பாங்கி | 303 | 0 | 0 |
| வட்டி வரவு | 17 | 10 | 9 | தபால்வகை | 183 | 10 | 0 |
| முன்பணம் | 50 | 0 | 0 | நானாவகை | 37 | 15 | 0 |
| வேளாள பாங்கி | 780 | 0 | 0 | | | | |
| தபால்வகை | 43 | 10 | 0 | | | | |
| நானாவகை | 4 | 8 | 0 | | | | |
| ஆ | 2424 | 1 | 0 | ஆ | 2424 | 15 | 0 |
| ஆரம்ப இருப்பு | 20 | 0 | 0 | முடிவு இருப்பு | 19 | 2 | 0 |
| ஆ | 2444 | 1 | 0 | ஆ | 2444 | 1 | 0 |

**சமாஜத்தின் ரொக்க இருப்பு**

| | | | |
|---|---|---|---|
| வேளாள பாங்கியில் | 8 | 6 | 2 |
| இந்தியன் பாங்கியில் | 303 | 0 | 0 |
| கையிருப்பு | 19 | 2 | 0 |
| ஆ | 330 | 8 | 2 |

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்**, காரியதரிசி.
**தி. க. சுந்தரம் பிள்ளை**, பொருட்காப்பாளர்.
**க. இரத்தின முதலியார்**, மாதக்கணித பரிசோதகர்.
**ஈ. ந. தணிகாசல முதலியார்**,
சென்னை, 8-12-1934. ஆண்டுக்கணித பரிசோதகர்.

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

## 29-ம் ஆண்டு கணிதபரிசோதனை அறிக்கை

இந்த ஆண்டு கணக்குகளையும் பரிசோதிக்கலானேன். அவை மாதமாதம் செவ்வனே ஒழுங்காய்ப் பரிசோதிக்கப் பட்டிருக்கின்றன. சென்ற வருஷத்தில் சமாஜத்தின் கையிருப்பு ரூ.459-4-11. இவ்வருஷத்தில் இந்தியன் பாங்கு சேவிங்ஸ்பாங்கு கணக்கில் ரூ. 303-0-0-ம் வேளாள ஐக்கிய நாணயபாங்கில் ரூ.8-6-2-ம் காரியதரிசி கையிருப்பு ரூ.19-2-0 ஆகமொத்தம் ரூ. 330-8-2 கையிருப்பாய் நிற்கின்றது. அவ்வாறு குறைந்ததற்குக் காரணம் பெரும்பாலும் சமாஜ வெளியீடுகளையும் அச்சிடுவதற்கான செலவுகள். சித்தாந்த சாஸ்திரங்கள் இவ்வாண்டு விழாவில் வெளியாகும். அவற்றின் விற்பனையாலும் சமாஜ இருப்பான பல நூல் பிரதிகள் விற்பனையாலும், அதற்கு உதவிபுரியும் அன்பர்களின் துணையாலும் கையிருப்புத் தொகை அதிகரிக்கப்படுமென்று நம்புகின்றேன். 11-ம் திருமுறை 692 பிரதிகள் விலையாகாதிருப்பது நாம் வருந்தத்தக்கதே. இது பல சைவர்கள் கையிலில்லை. முன்னர் கிடைப்பதும் அரிதாயிருந்தது. இதன் அடக்க விலை அணா 11. (22 பாரம் அடங்கியது.) இதை கூடிய சீக்கிரத்தில் யாவர் கையிலும் பயன்படச் செய்வது சைவசமயக் கடமையாகும். அவ்வாறே திருமந்திரம் (விலை ரூ 1/-மூவாயிரம் பாடல்கள். 37 பாரம் அடங்கியது.) விலையாகாத பிரதிகள் 495 காரியதரிசியிடம் இருக்கின்றன. மற்றுமுள்ள திருவாசக உரை 364 பிரதிகளும் ஏனைய சிறு விலையுள்ள நூல்களும் இவ்வாண்டில் விலைபெறுமென்று நம்புகின்றேன். ஆண்டு வரவுசெலவுக் கணக்குத் தொகுப்பேடு இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஈ. ந. தணிகாசல முதலியார்,
ஆண்டுக்கணித பரிசோதகர்.

## சமாஜ ௨௯-ம் ஆண்டு நிறைவிழா

[G. கலியாணம், B. A., Dip. Ec.]

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 29-ம் ஆண்டு விழாவும், சைவர் மகாநாடும் பண்ணுருட்டிக்கடுத்த திருவதிகைவீரட்டானம் என்னும் தலத்தின்கண் 23-12-34 ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று நாட்கள் நடைபெற்றன.

22-12-34 சனிக்கிழமை மாலை ஆண்டுவிழாத் தலைவர்கள் மேளவாத்தியத்துடன் பண்ணுருட்டியிலிருந்து ஊர்வலமாகத் திருவதிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 23-12-34 ஞாயிற்றுக்கிழமை காலை சமாஜத்தினரும், மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களும் வீரட்டானத் திருக்கோயில் வழிபாடு செய்தனர். சமாஜ அடக்கவிலைப் பதிப்பான சித்தாந்த சாத்திரத்தைத் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சொற்பொழிவாற்றி வீரட்டானேசுரர் திருமுன் வெளியிட்டார்கள். இவ்வெளியீட்டிற்காகத் திருவாவடுதுறையாதீன கர்த்தர் ஐம்பது ரூபாயும், ராவ்பகதூர் T. M. ஐம்புலிங்க முதலியாரவர்கள் ஐம்பது ரூபாயும் நன்கொடையாக அளித்தனர்.

பின்னர் அற்றைநாள் மாலை 3-30 மணிக்குத் திருவதிகைக் கோயில் திருவிழா மண்டபத்தில் மகாநாடு கூடிற்று. கடவுள் வணக்கம் முடிந்தபின் பாண்டிநாடு, கொங்குநாடு, சோழநாடு, சேரநாடு, நடுநாடு, தொண்டைநாடு, ஈழநாடு இவைகளின் பிரதிநிதிகளான தமிழ்ப் பேரறிஞர்கள் சைவத் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்களைத் தலைமைவகிக்கக் கேட்டுக்கொண்டார்கள். தலைவர் ஆசனத்தமர்ந்தபின் வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளை மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், எம். ஏ., எம். எல். விண்ணப்பித்துக்கொண்டார்கள். அடிகளும் அரியதோர் பேருரையாற்றி மகாநாட்டைத் "திண்ணமாகத் திறந்தருள்செய்தனர்." சமாஜ அமைச்சர், ஆண்டு அறிக்கையைப் படித்தார்; பேரவை அதை ஏற்றது. பிறகு தலைவர் தம் தலைமைப்பேருரையை நிகழ்த்தினார்கள்.

திருவாளர்கள் கி. குப்புச்சாமி முதலியார், சிவகுருநாத பிள்ளை, C. M. இராமச்சந்திர செட்டியார் ஆகிய பேரறிஞர்கள் முறையே "திருவெம்பாவை", "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவிதம்", "சொல்லுக்குறுதி" என்பவைகளைப்பற்றி மிக்க ஆராய்ச்சியோடு கூடிய அரிய சொற்பொழிவுகளை ஆற்றினர். தலைவர் கருத்துரை கூறியபின் இரவு 10 மணிக்கு முதல்நாள் கூட்டம் இனிது முடிந்தது.

மறுநாள் 24-12-34 திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் திருவதிகைக் கணித்தேயுள்ள மகேந்திரவர்ம பல்லவனால் எடுக்கப்பட்ட குணதரேச்சுரக் கோயிலுக்குச் சென்று கூட்டத்தினர் தரிசித்தனர். ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், இக்கோயில், சமயசரித்திர சம்பந்தமான முக்கிய கோயில் என்றும், இது பாழ்நிலையில் இருப்பக் காண்பது வருந்தத்தக்கதென்றும், அன்பர்கள் இதைப் புதுப்பிக்க முற்படவேண்டும் என்றும், அப்பர் பெருமானின் அரும் பெருங் குணங்களைப் பற்றியும், அரசன் அப்பர் சுவாமிகளிடம் காட்டிய அன்பிற்கு அறிகுறியாக இக்கோயிலெடுக்கப்பட்டதென்றும் கூறி இனியதொரு விரிவுரை ஆற்றினார்கள்.

பின்னர் 10 மணிக்கு, சைவ இளைஞர் மகாநாடு கூடிற்று. சைவத்திருவாளர் கீ. இராமலிங்கமுதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். வரவேற்புரைகள்முடிந்தவுடன் தலைவர் தம்முன்னுரையை நிகழ்த்தினார்கள். பிறகு சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. (இவை அடுத்த இதழில் வெளிவரும்.)

மாலை 2-30 மணிமுதல் 5 மணிவரை சைவ மங்கையர் மகாநாடு, திருநிறைசெல்வி வித்வான் தாணு அம்மையார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அக்கூட்டத்திற்குத் திரளான பெண்மக்கள் வந்திருந்தது மகிழ்ச்சிக்குரியது. இம்மகாநாட்டுத் தீர்மானங்களும் அடுத்த இதழில் வெளிவரும்.

சைவர் மகாநாடு மறுபடியும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாயிற்று. கூட்டம் அதிகரிக்கவே, மண்டபத்தில் இடமில்லாமையின் வெளியே பதினாறுகால் மண்டபத்தைச் சுற்றிக் கூட்டம் கூட்டப்பட்டது. சைவத் திருவாளர்கள் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்., கா. சுப்பிரமணியபிள்ளை,



எம். ஏ., எம். எல்., இவர்கள் முறையே "பொன்வண்ணத்தந்தாதி", "அப்பர் தேவாரச் சிறப்பு" என்னும் பொருள்களைப் பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் தம் கருத்துரை கூறிமுடித்தபின் இரவு 8 மணிக்கு இரண்டாம்நாட்கூட்டம் இனிது நிறைவேறியது. அன்றிரவே பண்ணுருட்டி நாடகக்கொட்டகையில் 9-30 மணிக்கு வாலாஜாபாத்து இந்து மத பாடசாலைச்சிறுவர்கள், சமாஜ அமைச்சர் சைவத்திருவாளர் ம. பால சுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் இயற்றிய அப்பர் நாடகத்தை நடித்தனர். மகாநாட்டுத் தலைவர்களும், சொற்பொழிவாளர்களும், அரும்பெரும் புலவர்களும், மற்றவர்களுமாகத் திரளான மக்கள் வந்திருந்து கண்ணுக்கினிய காட்சியைக் கண்டும், செவிக்கினிய பாடல்களைக் கேட்டும் ஆனந்தித்தனர். ஆங்கெழுந் தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நாடகம் முடிந்தபின் நாடகம் நடித்தோர் திறமையைப் பற்றி வியந்து பேசினார்கள்.

மூன்றாம்நாள் 25-12-34 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சமாஜக் காரியக்கூட்டம் நடந்தது. தீர்மானங்கள்* உத்தியோகஸ்தர்தேர்தல் முதலியன நடைபெற்றன. பின்னர், மகாநாட்டின் ஆரம்பத்தில் சமாஜம்நடத்திய தேர்வில் வெற்றியடைந்த திரு. சுப்பிரமணிய உடையாருக்கு "இளஞ்சைவப் புலவர்" பட்டமும் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டன. பிறகு கீழ்க் குறித்தபடி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன:—

| | | |
|---|---|---|
| திரு. தாணு அம்மையார் | ... | "இலகவதியார்" |
| ,, கீ. இராமலிங்கமுதலியார் | ... | "பட்டினத்தார்" |
| ,, அ. ச. சம்பந்தமுதலியார் | ... | "மெய்ப்பொருள்நாயனார்" |
| ,, மறை. திருநாவுக்கரசு | ... | "திருத்தாண்டகம்" |
| ,, அ. சிதம்பரநாதசெட்டியார் | ... | "பெரியார் இருவர்" |

மறுபடியும் மாலை 2-45 மணிக்கு மகாநாடு தொடங்கப்பட்டது. சைவத்திருவாளர்கள் வித்துவான் பெரியசாமிப் பிள்ளை, புரிசை முருகேச முதலியார் இவர்கள் முறையே "திருநாவுக்கரசர்," "புனிதவதியார் திருமணம்" என்பன பற்றி இனிமையாகப் பேசினார்கள். தலைவர்கள், சொற்பொழி

*இவை அடுத்த இதழில் வெளிவரும்.

வாளர்கள், வரவேற்புக் கழகத்தினர் முதலியவர்களை மாலை 5 மணிக்குப் புகைப்படமெடுத்தனர். பின்னர்க் கீழ்க்கண்டபடி சொற்பொழிவுகள் நிகழ்ந்தன:—

திரு. T. S. கந்தசாமி முதலியார் ... "திருவள்ளுவர் அறநெறி"
,, அ. மு. சரவணமுதலியார் ... "சொற் செல்வம்"
,, ந. மு. வேங்கடசாமி நாட்டார் ... "தவநெறி"
,, பு. சமரபுரிமுதலியார் ... "சங்கானேசண்முகன்"
,, ச. சச்சிதானந்தம்பிள்ளை ... "கந்தரநுபூதி"

சமாஜ அமைச்சர், திறப்பாளர்க்கும், தலைவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும், வரவேற்புக் கழகத்தினர்க்கும், மகாநாடு நன்கு நிறைவேறப் பலவழிகளிலும் உதவிபுரிந்த அன்பர்களுக்கும் வந்தனை கூறினர். வரவேற்புக்கழகச் சார்பாக அதன் அமைச்சர் திரு. தி. கு. கி. நாராயணசாமிநாயடு அவர்களும் மகாநாட்டுத் தலைவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும், மகாநாடு இனிது நடைபெறப் பொருளுதவி செய்தவர்கட்கும், வேறு பலவகையில் துணை புரிந்தவர்கட்கும் வந்தனோபசாரங் கூறி மாலையிட்டனர். தலைவர் அவர்கள் தமது முடிபுரையைக் கூறியபின் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தம் ஆசீர்வாதப் பேருரையை ஆற்றினார்கள். இரவு 12 மணிக்கு மகாநாடு இனிது முடிந்தது.

மூன்று நாட்களிலும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் வந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டுச் செவிக்கின்பம் துய்த்தனர். இடையிடையே திருநெல்வேலி உயர்திரு சுந்தரமூர்த்தி ஓதுவார் அவர்கள் தேவார திருவாசகத் திருப்புகழ் முதலிய பாடல்களைத் தமது கூர்த்தமதியால் சந்தர்ப்பங்களுக்கேற்பப் பக்கவாத்தியங்களுடன் இனிமையாகப் பாடிக் கூட்டத்தினரை இன்புறச் செய்தனர். "செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்றதற்கிணங்க வெளியூர் அன்பர்களுக்கு உணவுவசதி இடவசதி முதலியவைகள் செய்துகொடுத்த வரவேற்புக் கழகத்தார் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது. இதுவரை எந்த ஆண்டுவிழாவிற்கும் இவ்வளவு கூட்டம் கூடியதில்லையென்று அங்கத்தினரும் பிறரும்பேசிக்கொள்வது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

"... சைவக் குலமிக வாழியே"

## ஒரு வேண்டுகோள்

திருப்புகழ் முழுமையும் அடக்க விலைச் சுத்தப் பதிப்பாகச் சமாஜத்தினின்று வெளிவர வேலை தொடங்கப்படும். அன்பர்கள் தங்கள் வசமுள்ள ஓலைப் பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றை உடனே அனுப்பி உபகரிக்க வேண்டுகிறோம்.

---

## தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ௫௧-ம் ஆண்டு நிறைவிழா

இது மிகச் சிறப்பாகத் தூத்துக்குடியில் ராவ்சாஹிப் C. M. இராமச்சந்திர செட்டியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் 29, 30 12 34 நாட்களில் நடைபெற்றது. முதல்நாட்காலையில் தலைவரவர்கள் ரயில்வேஸ்டேஷனிலிருந்து ஊர்வலமாக அழைக்கப்பட்டனர். உயர்திரு. சுந்தர ஓதுவார் மூர்த்திகளால் திருக்கோயில் வழிபாடு, திருவீதி வலம், திருமுறை முழக்கம் செய்யப்பெற்றன. அன்று மாலை 3 மணிக்குப் பேரவை தொடங்கப்பட்டது. திரு. S. T. பொன்னம்பலநாத முதலியாரவர்கள் பேரவையைத் திறந்துவைத்தார்கள். பிறகு தலைமைப் பேருரை நிகழ்ந்தது. திருவாளர்கள் அ. மு. சரவண முதலியார், அ. வரதநஞ்சைய பிள்ளை, கே. ஆறுமுகம் பிள்ளை ஆகிய பேரறிஞர்கள் 'நீலகண்டன் மனமும் ஆலமுண்டான் சினமும்', 'திருவருட்செயல்' 'கோயில்களும் உருவ வழிபாடும்' என்பனபற்றி முறையே சொற்பொழிவாற்றினார்கள்.

மறுநாட்காலை திரு. மா வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் சைவ சித்தாந்த சாத்திரங்களில் மாணவர்கட்குத் தோன்றும் ஐயங்கள் பலவற்றைத் தெளிவித்தார்கள். பிறகு கிருஷ்ணபிள்ளை பெண்பாடசாலை மாணவிகள் சுந்தரர் சரிதையில் தடுத்தாட்கொண்ட பகுதியை நாடகமாக நடித்தார்கள். மீண்டும் மாலை 3 மணிக்குப் பேரவை தொடங்கப்பட்டது. திருவாளர்கள் அ. வரதநஞ்சைய பிள்ளை, வித்வான் தாணு அம்மையார், அ. மு. சரவண முதலியார், கே. ஆறுமுகம் பிள்ளை, ஆகிய பேரறிஞர்கள் முறையே 'இளையான்குடிமாறநாயனார்', 'மங்கையர்க்கரசியார்', 'வாதவூரடிகட்குபதேசம்', 'முருகன்' என்னும் பொருள்கள்பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

தமிழ்ப்பண்டிதர்கள் சம்பளத்தைக் குறைக்கும்படி அரசாங்கத்தார் பிறப்பித்துள்ள புதிய உத்தரவைக் கண்டித்துப் பேரவை ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. வந்தனோபசாரம், கடவுள் வாழ்த்து முதலியவற்றோடு இவ்விழா நிறைவெய்திற்று. இவ்விழாவையொட்டி சைவ மங்கையர் மகாநாடு ஒன்று 31-12-34-ல் திரு. தாணு அம்மையார் தலைமையில் கூடிற்று. முனிசிபல் கவுன்சில் அங்கத்தவர் மிஸஸ். எஸ். இராஜகோபாலம்மையாரும் வேறு பலரும் பேசினார்கள்.

---

## சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்

சந்தாதாரர்கள் விலாசங்கள் புதுவதாக அச்சிடப்படும். விலாசங்களில் திருத்தங்கள் உளவேல், அவைகளை அன்பர்கள் உடனே நமக்குத் தெரிவித்து உபகரிக்க வேண்டுகிறோம்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 1

உ

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சித்தாந்த சாத்திரம் பதினான்கு

# மூலமும் உரையும்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு; 1136 பக்கங் கொண்டது; நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பெற்றது; அழகான முழுக்கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது; மிகத்திருத்தமாகப் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு மூலமும் உரையும் செப்பஞ் செய்யப்பெற்றது; சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் ஆகிய மூன்று நூல்கட்கும் இதுவரை அச்சிடப்பெறாத சிந்தனையுரையோடு கூடியது; துகளறுபோதம் என்ற நூலின் மூலத்தை அநுபந்தமாக வுடையது.

தனிப்பிரதி விலை ரூபா மூன்று. ரிஜிஸ்தர்தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூபா பத்து.

ரயில்வே பார்சல், தபாற்கூலி வேறு. விவரங்கட்கு உடனே ரிப்ளை கார்டு எழுதுக. சிலோன் வாசிகட்கு வி. பி. இல்லை. இன்று முதல் ஒருமாதம்வரையில் 1935௵த்திய சந்தாவைச் செலுத்திய சமாஜ அங்கத்தவர்க்குமட்டும் ஒவ்வொரு பிரதி ரூபா இரண்டு என்ற விலைக்குத் தரப்படும். இதைப் பெறுவதற்கு விலையும் தபாற்கூலியும் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். வி. பி. இல்லை. பிரதிகள் சிலவே யுள்ளபடியால் உடனே பணம் அனுப்பிப் பெறுக.

இங்ஙனம்

10—1—1935. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.